# கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்த புராணம் - பகுதி 8a
# 4. யுத்த காண்டம் /பாகம் 1 (1 - 456)

# kantapurANam of kAcciyappa civAccAriyAr
# part 8a /canto 4 (verses 1 - 456)
# In tamil script, Unicode/utf-8 format

---

**Acknowledgements:**
Our Sincere thanks go to Dr. Thomas Malten & colleagues of

the Univ. of Koeln, Germany for providing with a transliterated/romanized version of this work and for permissions to release the Tamil script version as part of Project Madurai collections.
Our thanks also go to Shaivam.org for the help in the proof-reading of this work in the Tamil Script format.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.
© Project Madurai, 1998-2007.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website http://www.projectmadurai.org/ You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய
கந்த புராணம்
பாகம் **8a /4.** யுத்த காண்டம் /
படலம் **1- 3 (1 - 456)**

1. ஏமகூடப் படலம் 1- 36
2. வரவு கேள்விப் படலம் 37 - 63
3. முதனாட் பானுகோபன் யுத்தப் படலம் 64-456

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

# **4** யுத்த காண்டம்

## **1.** ஏமகூடப் படலம் **(1- 36)**

1 நாரண னென்னுந் தேவும்
நான்முகத் தவனும் முக்கட்
பூரணன் தானு மாகிப்

புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேறா
அநாதியாய் உயி£¢கட்
கெல்லாம்
காரண னாய மேலோன்
கழலிணை கருத்துள்
வைப்பாம். 1

2 திண்ணிய அவுணர்
தம்மைச் செற்றிட இன்னே
செவ்வேற்
பண்ணவன் ஏகும் எல்லா
அமரரும் பாங்கிற் செல்வர்
துண்ணென யானும் ஏகா
தொழிவது சூழ்வன்
றென்னா
எண்ணிவந் திடுவான்
போல இரவிவந் துதயஞ்

செய்தான். 2

3 இரவிவந் துதய வெற்பின்
எய்திய காலை தன்னின்
அரியணை மிசையே
வைகும் அறுமுகங்
கொண்ட அண்ணல்
பிரமன்மால் மகவான்
தேவர் முனிவரர் பிறருங்
கேட்ப
வரமிகு சிறப்பின் வீர
வாகுவை நோக்கிச்
சொல்வான். 3

4 பாவமே பயிலுஞ் சூர
பன்மனும் அவுண ரானோர்
ஏவரும் முடிவா ராக
இமையவர் இடும்பை நீங்க
மாவியல் கின்ற வீர

மகேந்திர புரத்துக் கின்னே
போவது புரிது நந்தேர்
பொள்ளெனக் கொணர்தி
என்றான். 4

5 வள்ளல்மற் றிதனைச் செப்ப
மாலயன் மகவா னாதி
உள்ளபண் ணவர்கள் கேளா
உவகையங் கடலின்
மூழ்கித்
தெள¢ளிதின் எமது துன்பந்
தீர்ந்தது தீர்ந்த தென்னாத்
துள்ளினர் ஆடிப் பாடி
அவனடி சூட லுற்றார். 5

6 ஆயது காலை தன்னின்
அரும்பெருங் கயிலை
போற்றும்
நாயக நந்தி அண்ணல்

நற்கணத் தலைமை
பூண்டோன்
சேயதோர் மனவே
கப்பொற் றேரொடு வலவன்
தன்னைக்
கூயினன் கொண்டு வல்லே
குமரவேள் முன்னர்
உய்த்தான். 6

7 முன்னுற மருத்தன் தூண்டு
முரண்டகு தடந்தேர் நண்ண
அன்னை அருளின் நோக்கி
அறுமுகம் படைத்த
அண்ணல்
பன்னெடுஞ் சீயந் தாங்கும்
பைம்பொனின் தவிசு
தன்னின்
மன்னினன் இருத்தல் நீங்கி

எழுந்தனன் மறைகள்
போற்ற. 7

8 மாறில்பொன் சுடரும் மேரு
வரைமிசை இருமூ
வெய்யோர்
வேறிலா தொருபாற் பட்டு
விளங்கிவந் திவரு
மாபோல்
ஆறுமா முகத்தெம் மையன்
அனையதொல் இரத
மீக்கண்
ஏறினான் ஏறிச் சூழ்வோர்க்
கினையதொன் றியம்பு
கின்றான். 8

9 வா£¢திரை அளக்கர்
நாப்பண் வரம்பிலா

அளவைத் தாகிச்
சீர்திகழ் மகேந்தி ரப்போர்த்
திருநகர் முன்னர் ஏகிச்
சூர்தனை அடுவான்
போதுந் துண்ணென நீவிர்
நுந்தம்
ஊர்திகள் தம்மில் மேவி
ஊர்ந்திவண் வருதி
ரென்றான். 9

10 இப்படி முகமா றுள்ள
எம்பிரான் இசைத்த
லோடும்
அப்பணி இசையா வேதன்
அன்னத்தும் ஆழி
மேலோன்
ஒப்பரும் உவண மீதும்
உம்பர்கோன் மான மீதுஞ்

செப்புறும் ஏனை
விண்ணோர் தத்தமூர்
தியினுஞ் சோ¢ந்தார். 10

11 அந்தமில் இலக்கத் தோரும்
அவரலா எண்மர் தாமும்
மந்தரம் உறழும் வீர
வாகுவாம் வன்மை
யோனும்
எந்திர வயமான் தேரின்
வீற்றுவீற் றேறி யார்க்குஞ்
சிந்தையி னானும் எட்டாத்
தேவர்க டேவற் சூழ்ந்தார்.
11

12 சுப்பிரன் மேக மாலி
சுவேதசீ ரிடன்க பாலி
அப்பிர சித்துச் சித்தி
ராங்கனே சுவால தாலு

ஒப்பில்வச் சிரனே வீமன்
உக்கிரன் உக்கி ரேசன்
பிப்பிலன் நந்தி சேனன்
பிரமசன் பிரம சேனன். 12
13 பதுமனே கராளன் தண்டன்
பத்திரன் பரிக நேமி
உதவகன் புட்ப தந்தன்
உருத்திரா காரன் வீரன்
மதிசயன் கேது மாலி
வக்கிரன் பிரம கேசன்
அதிபதி கலிங்கன் கோரன்
அச்சுதன் அசலன் சாந்தன். 13
14 சித்திர சேனன் பூரி
சுசீலன்மா சயனே சிங்கன்
உத்தர மடங்கற் பேரோன்
உபதிட்டன் சயனே ஈசன்
மத்தகன் மதங்கன் சண்டி

மகாபலன் சுவேதன் நீல
பத்திரன் சுவாகு அண்டா
பரணனே காக பாதன். 14

15 பிங்கலன் சமானன் மாயன்
பிறங்கிய நிகும்பன் கும்பன்
சங்கபா லன்வி சாகன்
சதநாவன் அயக்கி ரீவன்
அங்கையா யிரத்தன்
செங்கண் அயுதத்தன்
அனந்தன் வாமன்
மங்கல கேசன் சோமன்
வச்சிர மாலி சண்டன். 15

16 அசமுகன் சரபன் குந்தன்
ஆடகன் கவந்தன் மேகன்
விசயன்வித் துருமன் தண்டி
வியாக்கிரன் கால பாசன்
தசமுகன் குமுதன் பானு

தனஞ்சயன் இடப ரூபன்
சுசிமுகன் அனல கேசன்
சுபத்திரன் கேது மோகன். 16

17 மத்தனுன் மத்தன்
மனோபவன் வாயு வேகன்
பத்துநூ றடிகள் பெற்றோன்
பானுகம் பன்ப தங்கன்
சுத்தனே அனிகன் சீதன்
சுனாதனே சுமாலி மாலி
அத்திரி அவுணர் கூற்றன்
அரிகேசன் சுவால கேசன். 17

18 இங்கிவர் பூத வெள¢ளத்
திறையவர் ஒருநூற்
றெண்மர்
பொங்குவெஞ் சினத்தர்
எல்லாப் புவனமும்
அடவென் றாலும்

அங்கொரு நொடிப்பின்
முன்னர் அடுபவர் ஆடல்
மிக்கோர்
சங்கையில் வலியோர்
யாருஞ் சண்முகத் தவனைச் 18
சூழ்ந்தார்.
19 ஏயெனப் பகரும் முன்னம்
இவ்வகை எவருஞ்
செவ்வேற்
சேயினைச் சூழ்த லோடுஞ்
செய்கைமற் றதனைக்
காணூஉ
மாயிருட் பரவை ஞாலம்
வரைக்குலம் பனிப்ப
ஆர்த்திட்
டாயிரத் திரட்டி வெள¢ளத் 19
தனிகமும் எழுந்த அன்றே.

20 எழுந்தன அனிக
வெள்ளம் ஈண்டிய எங்கும்
விண்ணோர்
பொழிந்தனர் பூவின் மாரி
பூதர்தந் தெழிப்பு விண்ணும்
ஒழிந்திடு திசையும் பாரும்
உற்றன உலைந்த தாழி
அழிந்தன கருவி வானம்
அண்டம்நெக் குடைந்த 20
மாதோ.
21 கல்லென இரங்கு பேரி
கரடிகை துடியே காளஞ்
சல்லரி திமிலை தக்கை
தண்ணுமை படகங் கோடு
வல்லியல் உடுக்கை சங்கம்
வான்குட முழவ மாதிப்
பல்லியம் அனந்த கோடி

பாரிடம் இயம்பிச் சென்ற. 21
22 கள்ளலம் புற்ற தண்டார்
கவினிய மொய்ம்பிற் பூத
வெள¢ளமங் கேக லோடும்
விரிந்தெழு பூழி மாலை
தள்ளருஞ் சுடர்கண் மாற்றி
அகிலமுந் தானே யாகி
அள்ளலங் கடலின்
பேழ்வாய் அடைத்தது
திடரே யாக. 22

23 கலகல மிழற்றும் நோன்றாட்
கழல்புனை பூத வெள¢ளம்
வலவயின் எ·கம் ஏந்தும்
வள்ளல்தாள் வழுக்கிச்
சூழ்ந்து
செலவுறு கிரிகள் மானச்

சென்றுதந் தலைவ ரோடும்
அலைபொரும் அளக்கர்
வேலை அகன்கரை இறுத்த 23
அம்மா.

24 மடங்கலை உறழும்
மொய்ம்பின் மாபெரும் பூத
வெள₵ளந்
தடங்கழல் கலிப்பத் தாளிற்
சலசல ஒலிப்ப மாறா
நெடுந்திரை அலமந் துள்ள
நேமியங் கடலே ஆறா
நடந்தன பொறையாற் றாது
சேடனும் நடுக்கம் உற்றான். 24

25 படிதவிர் பூத வெள₵ளம்
படா₵தலும் பரட்டின்
காறாக்
கடலள வமைந்த தன்றே

கனல்விழிச் சுறவு சின்னை
கெடலருந் திமிங்கி லாதி
கீடம்போல் உலவா நின்ற
அடியுறை பரலே போன்ற
அதற்படு கிரிகள் முற்றும். 25

26 தந்திரப் பூத வெள¢ளந்
தடங்கட லாற்றிற் சார
வெந்திறல் துணைவர்
யாரும் விரிஞ்சனும் மாலும்
மற்றை
இந்திரத் தலைவன் தானும்
இமையவர் பலருஞ் சூழ
அந்தரத் தாற்றிற் சென்றான்
அறுமுகன் அணித்திண்
தேர்மேல். 26

27 மாறுபட் டவர்மேற்

செல்லும் வயப்பெரும் பூதர்
ஏக
ஆறுபட் டமரும் முந்நீர்
அலமந்து தௌ¤வின் றாகிச்
சேறுபட் டிறைய தொன்று
தேயந்திடு முன்னம் அ·தே
நீறுபட் டெழுந்து சென்றெவ்
வுலகமும் நிமிர்ந்து சூழந்த. 27

28 இவ்வகை அயில்வேல்
அண்ணல் இராயிரம் பூத
வெள¢ளங்
கவ்வையின் அமைந்து
செல்லக் கனைகடல்
வரைப்பின் ஏகி
எவ்வம தடைந்த தொல்லை
இலங்கையங் குவடு நீங்கி
மைவரை புரைசூர் மேவு

மகேந்திர புரமுன்
போந்தான். 28

29 வேறு
போந்தகாலை
அயலின்வந்து
போற்றியங்கை கூப்பியே
நாந்தகஞ் சிலைகதை
நலங்கொள் சங்குசக்கரம்
ஏந்தினோனும்
நான்முகனும் இந்திரத்
தலைவனும்
ஆய்ந்துநேடி இன்னதன்மை
ஆர்வமோ டியம்பினார். 29

30 காண்டியீது சூரனூர்
கடுங்கண்நீசர் செறிதலால்
ஆண்டுசேறல் முறையதன்

றதற்கடுத்த எல்லையாம்
ஈண்டுபாச றைத்தலம்
இயற்றுவித் திருந்தபின்
வேண்டுமாறு புரிதிஐய 30
வினையநாடி என்னவே.
31 குன்றெறிந்த முருகன்அன்ன
கூற்றுணர்ந்தி சைந்திடா
நன்றிதென்
றருட்கண்வைத்து
நாகர்கம்மி யன்தனை
மன்றஅன்பொ டேவிளித்து
வல்லைஈண்டு பாசனை
ஒன்றுசெய்தி டென்னலும்
உளஞ்சிறந்து புகலுவான். 31
32 தாரகற் கடந்தவேற்
றடக்கைவீர ஈண்டியான்
ஓரிறைக்கு முன்னமாக

ஓங்குபா சறைத்தலஞ்
சீரிதிற் படைக்குவன்
தெரிந்துகாண்டி உனதுபேர்
ஆரருட் டிறத்தினென்
றடித்தலம் பணிந்துபின். 32

33 மாடகூட மண்டபம்
வளங்கொள்சோலை
வாவிகள்
பீடுலாய கோபுரம்
பிறங்குவீதி ஓர்திசை
கோடிகோடி ஆக்கி
மற்றொர் கோநகர்
இயற்றியே
நாடுமேம கூடமென்று
நாமமொன்று நாட்டினான். 33

34 கருத்திலன்ன வன்செயுங்
கவின்கொள்பாடி வீடுகண்

டருத்தியான்
மகிழ்ச்சியெய்தி
அருள்புரிந்து கந்தவேள்
திருத்தகுஞ் சனங்கள்
போற்றி செய்யஆண்டு
சென்றபின்
மருத்தன்உந்து நேரிழிந்து
மந்திரத்தை நண்ணினான். 34
35 அந்தமற்ற பூதர்தம்மை
ஆவணங்கள் நிறுவியே
முந்துகொற்ற வயவர்நான்
முகத்தனாதி அவரொடும்
மந்திரத்துள் ஏகியே
மகிழ்துவீற் றிருந்தனன்
இந்திரப்பெ ருமடங்கல்
ஏறுதாங்கு தவிசின்மேல்.

36 ஒன்பதோடி லக்கவீரர்
ஒங்கலார் அறுவர்கள்
அன்புசெய்து
போற்றிசெய்ய
அறுமுகேசன் அமரர்கள்
முன்புசெய் பணித்திறம்
முறைப்படப் புரிந்திட
இன்பினோடும் ஏமகூட
வெழிலிருக்கை
வைகினான். 36

ஆகத் திருவிருத்தம் - 36

---

## 2. வரவு கேள்விப் படலம் (37-63)

37 ஏகநா யகனாம் ஐயன்
இவ்விடை இருந்த எல்லை
நாகர்மேல் அளிவைத்
துள்ள நாரதன் அவற்றை
நாடி
மாகநீள் புரிசை சூழ்ந்த
மகேந்திர புரத்திற் சென்று
போகமார் உலகின் மேலாம்
புலவலன் கோயில் புக்கான். 1
38 புக்கனன் அவுணர் உய்ப்பப்
பொருவிலா இகல்வெஞ்
சூரன்
மிக்குயர் திருவி னோடும்
வீற்றிருந் திடுதல் காணூஉ
இக்கென இனைய தீயோன்
இறப்பவென் றுன்னி
வாயால்

தக்கதோர் ஆசி கூறிச்
சார்ந்தனன் தவத்தின்
மேலோன். 2

39 அங்கைகள் மலர நின்றே
ஆசிசெய் தானை நோக்கி
எங்குளை இங்கு வந்த
தென்னைநீ யாரை யென்ன
மங்கையோர் பங்கன்
மேவும் வடபெருங் கயிலை
வாழ்வேன்
நுங்குலந் தலைமை யாக
வைகலும் நோற்றல்
செய்வேன். 3

40 கைதவம் புகலேன் வெய்ய
காமமே முதல நீத்துச்
செய்தவம் பலவும்

உள்ளேன் தேவருக்
கிடுக்கண் செய்வேன்
மைதவிர் புகரி னோடும்
மருவுநண் புடையேன்
நின்பால்
எண்திஒன் றுரைக்க
வந்தேன் நாரதன் எனும்பே 4
ருள்ளேன்.

41 சிந்துவான் மதிதோய்
வேணிச் செல்வன்நின்
அடுவ தாகக்
கந்தனாம் முருகன்
தன்னைக் காமா¢கண்
ணழலால் நல்க
வந்தமா மதலை தன்பால்
ஐயஉன் பணிய தாற்றும்
இந்திரா தியர்கள் ஏகி

இறைஞ்சியே ஏத்தி யுற்றார். 5
42 உற்றுளா£¢ தமக்கு
நின்னால் உறுதுயர் குமரன்
கேட்பச்
சொற்றலும் அஞ்சல் என்று
தொல்சிவன் அருள்மேற்
கொண்டு
கொற்றவெம் பூத வீரர்
குழாத்தொடும் புவியின்
ஏகி
மற்றுன திளவல் தன்னை
வரையொடும் வேலாற்
செற்றான். 6
43 ஆண்டது புரிந்த பின்னர்
அறுமுகன் செந்தி மேவித
தூண்டினன் நினைக்கோ
ரொற்றைத் துண்ணென

அவனும் வந்து
மீண்டபின் புகுதி நாடி
வேலையைக் கடநது
தன்பால்
ஈண்டிய படையொ
டன்னான் இந்நகா¢
வடபால் வந்தான். 7
44 ஆங்கனம் பாடி வீடொன்
றாற்றுவித் தனிகம் யாவும்
பாங்குற இருந்தான்
செவ்வேள் பா£¢த்தனன்
இனைய வெல்லாம்
ஈங்கிது நிகழ்ந்த வண்ணம்
என்றலும் அவுணர்
கோர்மான்
தீங்கன லென்னச் சீறி
நகைததிவை செப்ப

லுற்றான். 8

45 வேறு

மேனிமிர் கொண்டல்

உயர்த்தவன் அம்புய

மிசைவேதா

நீனிற மாயவன் ஊரது

போல நினைந்தானோ

ஆனதொல் அண்டமொ

ராயிர கோடியும்

அரசாள்வேன்

மாநகர் மேலொரு பாலக

னாம்பொர வருவானே. 9

46 அரியின் இனஞ்செறி

சூழலின் அன்னவை

அடலுன்னிக்

கரியது கன்றுழை கலைபிற

வற்றொடு கடிதேகில்

பொருது வயங்கொள்
வல்லது கொல்அது
போலன்றோ
முருகனும் வெம்படை
யுடன்இவண் வந்திடு
முறைதானே. 10

47 வேலை கடந்தென தாணை
இகழ்ந்து வியன்பூதச்
சால நெடும்படை
தன்னுடன் இந்நகர்
சார்வானாங்
காலம் இதங்கவன் வீரம்
அழிப்பல் கருத்தில்லாப்
பாலகன் என்றும்
விடேன்வசை என்பதும்
பாரேனால். 11

48 முன்னொரு சூழ்ச்சியின்
அசமுகி ஒண்கரம்
முரிவித்தே
ஒன்னல ராய்அமர்
உம்பர்கள் யாவரும்
உய்ந்தாரோ
என்னிளை யானொடும்
வெற்பினை அட்டன
மெனவுன்னித்
தன்னுயிர் போவ
தறிந்திலன் இந்நகர் 12
தனின்வந்தான்.
49 ஆழிய தெண்டிரை ஆழ
கடைந்தவன் அலகில்லா
வேள்வி புரிந்திடு வாசவன்
அம்புய மிசைமேயோன்
வாழிய நம்பெயர் கூறினும்

அஞ்சினர் மறைகுற்றார்
பூழி புனைந்தவர் பாலக 13
னோஅமர் புரிவானே.

50 அந்தர மேல்வரு செங்கதி
ரைச்சிறை அமர்வித்த
மைந்தனை நாற்படை
தன்னொடு மேவி
வயப்போரால்
முந்திய பூதரை ஏனைய
வீரரை முடிவித்தே
கந்தனை யொல்லையின்
வெற்றிகொள் வேன்இது
காண்கிற்பாய். 14

51 என்றசு ரேசன் இசைத்தலும்
நாரதன் இவைகேளா
நன்றிது நன்றிது தாழ்க்கலை
இன்னினி நகா¢சூழச்

சென்றவ னைப்பொர
நின்படை ஏவுதி
செல்கின்றே
வென்றி நுமக்குற நோற்றிடு
வானென விண்போனான். 15

52 வேறு
நாரதன் இனைய கூறி
நகையொடு போத
லோடுஞ்
சூரருள் ஆற்றல் மிக்கோன்
துண்ணென அயலின் நின்ற
கோரன்உற் கோரன்
என்னும் ஒற்றரைக் குறித்து
நோக்கி
வாரிதி இறைவற் பற்றி
வல்லையிற் கொணர்தி

ரென்றான். 16

53 என்றலும் அனைய ரோடி
எறிகடற் கரசைக் கூவி
வன்றிற லோடு பற்றி
வல்லைமுன் கொணர்ந்தே
உய்ப்பக்
கன்றிய மனத்த னாகிக்
கைதொழு தவலங் கூர்ந்து
நின்றனன் அவனை நோக்கி
நெருப்பெழ விழித்துச்
சொல்வான். 17

54 பவ்வநீர் அரச கேண்மோ
பங்கயத் தவனும் மாலுஞ்
செவ்விதின் உணரா
வண்ணம் ஒளித்தவன்
சிறுவன் தன்னை
வெவ்வலி கடந்த பூத

வெள்ளத்தை நமது மாறா
இவ்விடை விடுத்த
தென்னை என்னலும்
இசைக்க லுற்றான். 18
55 மண்படு புவனம் போற்றும்
மன்னகேள் புயங்க மீது
கண்படு முகுந்தன் வேதாக்
கடவுளர் தலைவ னோடும்
எண்படு துணைவ ரானோர்
யாவரும் புடையிற் சூழ
விண்படு நெறியிற்
சென்றான் வீரவேற்
றடக்கை அண்ணல். 19
56 மடல்கெழு நீபத் தண்டார்
வள்ளல்வான் நெறியிற்
போத
மிடல்கெழு பூதர் என்பால்

மேவினர் சென்றார்
அன்னார்
அடிகளின் பரட்டின் காறும்
அமைந்திலன் அவரை
யானே
தடைசெய வல்லேன்
போலுந் தக்கதே இதுமற்
றன்றோ. 20
57 ஊழியும் உலையாப் பூதர்
ஒல்லெனச் செல்லத் தாளிற்
பூழியால் அளறு பட்டாங்
கிடையறப் புலம்ப லுற்றான்
ஆழியன் என்னும் பேரும்
அற்றனன் வசையே
பெற்றேன்
ஏழையேன் செய்வ
தென்கொல் எதிருண்டோ

வலியர்க் கம்மா. 21

58 தெள¢ளிதில் தமிழ்தேர்
காட்சித் திருமுனி கரத்தில்
வாரி
உள்ளுறக் கொண்ட
தேபோல் ஒல்லையின்
மிசைவர் போலாங்
கொள்ளையிற் செறிபூ
தர்க்குள் ஒருவரோர்
குடங்கை தன்னின்
அள்ளுதற் காற்ற கில்லேன்
ஆதலின் உய்ந்தேன்
அன்றே. 22

59 உடல்சின வசனி தன்னை
ஒண்பணி விலக்க வற்றோ
கடுமுரண் அரிமான்
ஏற்றைக் களிறெதிர்

விலக்கிற் றுண்டோ
மிடல்கெழு விதியைப் புந்தி
விலக்குமோ அ·தே
அன்றோ
அடல்மிகு பூதர் தம்மை
அளியனேன் தடுப்ப
தென்றான். 23

60 இற்றெலாம் அளக்கர்
கோமான் இசைத்துமெய்
துளக்க மெய்தி
நிற்றலும் நெடுவேல்
அண்ணல் நீள்நகர் நணிய
தன்மை
ஒற்றரிற் சிலவர் காணா
ஓடினா₵ ஒல்லை சென்று
கொற்றவற் பணிந்து
நின்§றிஇவையிவை கூற

லுற்றார். 24

61 அராவணை அண்ணல்
வேதா அரிமுதல் அமரர்
சூழ
விராவுறும் இலக்கத்
தொன்பான் வெலற்கரும்
வீரர் போற்ற
இராயிரம் பூத வெள¢ளம்
ஈண்டிட எறிநீர்ச் சென்னிப்
பராபரன் மைந்தன் நந்தம்
பதிவட திசையிற்
போந்தான். 25

62 வடதிசை அதனிற் போந்து
வானவர் புனைவற்
கொண்டே
படிபுகழ் தகைமைத் தான

பாசறை புரிவித் தாங்கே
புடைதனின் அனிக மான
பூதவெவ் வீரர் மேவ
நடுவணோர் நகரந்
தன்னின்நண்ணிவீற் 26
றிருந்தான் அன்றே.

63 கண்டனம் இதனை இன்னே
கடவது புரிதி யென்னாத்
திண்டிறல் வெய்ய தூதர்
செப்பலும் அதனைக் கேளா
அண்டமும் புவனம் யாவும்
அலமர வழலிற் சீறிப்
புண்டிகழ்ந் தனைய
கண்ணான் இவையிவை
புகல லுற்றான். 27

ஆகத் திருவிருத்தம் - 63

## 3. முதனாட் பானுகோபன் யுத்தப் படலம் (64 - 456)

64 கோதை வேலுடைக் குமரன
தாற்றலுங் கொற்றப்
பூதர் ஆற்றலும் ஏனையர்
ஆற்லும் போர்செய்
தூதன் ஆற்றலுந்
தொலைக்குவன்
துண்ணென நீவிர்
ஆத வன்தனிப்
பகைஞனைக்
கொணர்திரென் றறைந்தான். 1
65 ஆன காலையில் நன்றெனத்
தூதுவர் அகன்று

பானு கோபன திருக்கையுக்
கனையவற் பணிந்து
மேனி லைப்படு தந்தைதன்
பணிவிடை விளம்ப
மான வாலரித் தவிசுவிட்
டெழுந்தனன் மன்னோ. 2
66 தொல்லை மந்திரத்
தலைவருஞ் சுற்றமா
யினரும்
எல்லை சீர்தரு தானையந்
தலைவர்கள் யாரும்
ஒல்லெ லைப்புடை
சூழ்ந்தனர் உருமுகான்
றென்னப்
பல்லி யங்களும் ஆர்த்தன
போர்த்தன பதாதி. 3

67 அக்க ணத்தினில் இரவியம்
பகைஞனோ ரணித்தேர்
புக்கொ ராயிர கோடிவீ
திகளொரீஇப் புடையில்
தொக்க வீரரிற் கண்டுளார்
வயின்வயின் தொழப்போய்
மிக்க தாதைதன் திருநகர்
அடைந்தனன் விரைவின்.

68 தேரின் நின்றிழிந்
தண்ணலங் கோயிலுட்
சென்று
சூர பன்மனை அணுகியே
அவனடி தொழுது
வீர வீரநீ யெனையிவண்
விளித்ததென் னென்ன
வாரி ருங்கழல் மன்னவன்
இன்னன வகுப்பான்.

69 முந்து தாரக வெம்பியை
வரையொடு முடித்த
கந்த வேள்செந்தி நீங்கியே
அளக்கரைக் கடந்து
நந்தி தன்கணத் தலைவரும்
பூதரும் நணுக
இந்த மாநகர் வடதிசை
வாயில்வந் திறுத்தான். 6
70 சிந்து போன்றுல களந்திடு
கள்வனுஞ் செயிர்தீர்
கந்த மாமலர்க் கடவுளும்
என்பணி கடந்த
இந்தி ராதியர் யாவரும்
பிறருமாய் ஈண்டி
வந்து ளார்களாம் அறுமுக
மதலைதன் மருங்கு. 7
71 அளிய ராகிய அமரரும்

அரன்தரு மகவும்
ஒள¤று வாட்படை நந்திதன்
கணத்தினுள் ளோரும்
களியின் மூழ்கிய பூதருங்
கடிதுவந் தடைதற்
கெள¤து பட்டதோ
நன்றுநன் றிணையமா
நகரம். 8

72 பின்னை தன்னுடன்
அடுக்கலை மைந்தனைப்
பிறரை
முன்னம் அட்டிடும்
மாற்றலர் தங்களை
முருக்கச்
சென்னெ றிக்கொடு
போதலென் கடன்அவர்

சிறியர்
மன்னர் மன்னன்யான்
ஆதலின் இருந்தனன்
வறிது. 9

73 அந்தண் மாமுகில்
உயர்த்தவன் வேண்டலும்
அமலன்
தந்த கந்தனைச் சாரதத்
தலைவர்க ளோடு
நந்த மைப்பொர
விடுத்தனன் ஆதலின்
நானும்
மைந்த நிற்கொடு
வென்றிபெற் றிருந்திடல்
வழக்கே. 10

74 ஆத லால்இனிப்
படையொடும் அமர்க்களத்

தடைந்து
நாதன் மைந்தனை நந்திதன்
கணத்துளார் தம்மைப்
பூதர் தங்களைப்
பொருதழித் தடல்வயம்
புனைந்து
காதல் மைந்தநீ மீடியால்
நம்முனங் கடிதின். 11
வேறு
என்றிவை சூர்முதல்
இசைப்பக் கேட்டலும்
பொன்றிகழ தடம்புயம்
பொருப்பிற் சேட்செல
ஒன்றிய குமிழ்வடி வுடலம்
போர்த்திட
நின்றிடு திருமகன் இவைநி
கழ்த்துவான். 12

76 இருளுறு மிடற்றினன் ஏவும்
மைந்தனை
மருளுறு பூதரை மற்று
ளார்தமை
வெருளுறு சமரிடை
வென்று மீள்வதோர்
பொருளென
நினைந்துகொல் புகன்றி
இற்றெலாம். 13

77 பன்னுவ தென்னினிப்
பரமன் கான்முளை
இந்நகர் நணுகுமுன்
எதிர்ந்து போர்செய்வான்
நென்னலே வினவினன் நீய
தோர்ந்திலை
பின்னிது புகலுதல் பிழைய

தாகுமால். 14
78 படைப்பெருந்
தொறுவொடும் படர்ந்து
கந்தனை
அடுத்தனன் பேரமர் ஆற்றி
வென்றிகொண்
டிடுக்கணில் பூதரை ஏனை
யோருடன்
முடித்திவண் வருகுவன்
முதல்வ காண்டிநீ. 15
79 கந்தனை விறல்கொடே
அவன்றன் கட்படு
செந்திரு மார்பனைத்
திசைமு கத்தனை
இந்திரக் கள்வனை
இமைப்பில் பற்றிமுன்
தந்திடு கின்றனன் தகுவ

செய்தியால். 16
80 என்றிவை கூறியே
இறைஞ்ச மைந்தநீ
சென்றனை வருதியால்
திறலி னோடெனா
நன்றென விடைகொடு
நடந்து நன்கமை
பொன்றிகழ தனதுதேர்
புகுந்து போயினான். 17
81 தொல்லையிற் பரிசனம்
புடையிற் சூழ்தரப்
பல்பதி னாயிரந் துணைவர்
பாற்பட
ஒல்லென இயம்பல ஒலிப்ப
ஏகுறா
எல்லையம் பகைதன
திருக்கை எய்தினான். 18

82 பண்டியந் தேரினுந் தணந்து
பாங்கரின்
மண்டுறு தூதரை வல்லை
கண்ணுறீஇ
எண்டரு நம்படை யாவும்
இவ்விடை
கொண்டணை வீரென்கூறிப்
போயினான். 19

83 ஏயிரும் பரிசனர் யாரை
யும்நிறீஇ
மாயிருங் கலைமகள்
வதிந்து வைகிய
ஆயுத சாலையின் அவுணர்
கோன்மகன்
போயினன் தொழுதனன்
பூசை ஆற்றினான். 20

84 கயிரவ நிறத்தபூங் கச்சு

வீக்கினான்
வயிரவொள் வாளினை
மருங்கு சேர்த்தினான்
வெயில்விடு பொன்துகில்
மீது சுற்றினான்
துயிலறும் அமரரைத்
துளக்கங் கண்டுளான். 21

85 செல்லிடை உருமெனத்
தெழிக்கும் நோன்கழல்
கல்லென அரற்றிடக் கழலிற்
பூட்டினான்
வல்லிதிற் சாலிகை மருமஞ்
சேர்த்தினான்
சொல்லினும் நிவந்தெழு
தூண்டுசெய் தோளினான். 22

86 கோதையை அங்கையிற்

கொளுவிச் சுற்றினான்
போதுறழ் அங்குலி புட்டில்
தாங்கினான்
சோதிகொள் சரம்படு தூணி
யைச்சுவல்
மீதுற வீக்கினான் விறலின் 23
மேலையோன்.

87 வெம்பெரு நுதல்மிசை
விசயப் பாலதாஞ்
செம்பொனின் பட்டிகை
திகழச் சேர்த்தினான்
பம்புறும் அணிலம் பலவுந்
தாங்கினான்
தும்பையஞ் சிகழிகை
மவுலி சூட்டினான். 24

88 வடித்ததோர் பெருஞ்சிலை
வயமுண் டாகஎன்

றெடுத்தனன் விடுத்திடின்
யாவர் தம்மையும்
படுத்திடு மோகமாம்
படையொன் றேந்தினான்
அடுத்திடு செறுநர்தம்
மாற்றல் உன்னலான். 25

89 ஆனதோர் போரணி
அணிந்து, வாய்தலிற்
பானுவின் மாற்றலன் படர
முன்னரே
போனதோர் தூதுவர்
எழுதிர் போர்க்கெனத்
தானையோ டெழுந்தனர்
தகுவர் யாவரும். 26

90 வேறு

விசையன் நேமியன்
மிகுந்திறல் மாயன்
முசலி கண்டகன்
முரன்கரன் மூர்க்கன்
தசமுகன் கனலி சண்டன்
விசண்டன்
அசமுகன் மகிடன்
அக்கிர வாகு. 27
91 விசையசே னன்விட
சேனன் விமோகன்
வசைகொள் சோமகன்
மதுச்சசி சித்துச்
சுசிமுகன் அசனி சூனிய
கேது
அசுரசே னன்இவர்
ஆதியர் ஆனோர். 28
92 தடுக்கொ ணாவகை

தடிந்திடு தெய்வப்
படைக்கலங் களவை
பற்பல பற்றா
உடைத்தவன் மையுடன்
ஒய்யென வந்தார்
கிடைத்த தோவமர்
எனக்கிளர் கின்றார். 29
93 ஆனகா லைபதி னாயிர
வெள₵ளந்
தானவப் படைஞர்
சார்புதொ றேகி
மீனவே லைகளும்
வெள₵குற ஆர்த்து
மானவத் தலைவர்
மாடுற வந்தார். 30
94 கோல வார்சிலை
கொடுங்கதை நீடுஞ்

சூல நேமிஅயில்
தோமரம் ஈட்டி
ஆலம் வாள்கணையம்
ஆரெழு நாஞ்சில்
கால பாசமிவை
கைக்கொடு சென்றார். 31

95 கந்து கத்தொகை
கடங்கலுழ் கைம்மா
எந்தி ரத்திரதம் ஈங்கிவை
மூன்றும்
ஐந்தொ கைப்படுமி
ராயிர வெள¢ளந்
தந்தி ரத்தலைவர்
தம்புடை சூழ்ந்த. 32

96 ஐந்து நான்குடைய
ஆயிர வெள¢ளத்

திந்த நாற்படையும்
ஈண்டுபு செல்ல
மைந்தின் ஏற்றமிகு
மானவா¢ தத்தஞ்
சிந்தை போற்கடிது 33
சென்றனர் அம்மா.

97 சென்ற காவலர்கள்
சேனையி னோடும்
என்ற வன்பகைஞன்
எய்துழி நண்ணி
ஒன்ற அங்கைதொழு
தொல்லென ஆர்த்துத்
துன்றி வந்துபுடை
சூழ்ந்தனர் அன்றே. 34

98 இரவிதன் பகைஞன்
ஈங்கிவை காணா
ஒருதன்ஏ வலனை

ஒல்லையின் நோக்கித்
திருமைபெற் றதொரு
தேரினை வல்லே
தருகஎன் னஇனி தென்று
தணந்தான். 35

99 செப்பும் அத்தொழில்
சிங்கொடு சென்றே
மெய்ப்படைக் கருவி
மேவுழி நண்ணி
முப்ப தாயிர முரட்பரி
பூண்ட
ஒப்பிலா இரதம்
ஒன்றினை உய்த்தான். 36

100 உய்த்த தேரின்உத
யக்கி£¤ வாவு
மொய்த்த வெங்கதிரின்

மொய்ம்பொடு
பாய்ந்தான்
மெத்து பேரனிக
வெள¢ள மியாவும்
அத்துணைப் பொழுதின் 37
ஆர்த்தன அன்றே.
101 உரத்த கந்திகள் ஓராயிர
கோடி
பெருத்து நீண்டசைவு
பெற்றிடு பானை
விரித்து நீட்டியென
வெவ்வசு ரேசர்
கரத்தின் எண்ணில்கவ
ரித்தொகை வீச. 38
102 மற்ற வன்தனது மாசிருள்
மேனி
உற்றி டற்கருமை

யால்அவன் ஒண்சீர்
சுற்றி மீதுலவு தோற்றம
தென்னக்
கற்றை வெண்குடைகள் 39
காவலர் ஏந்த.

103 அடைப்பை கோடிகம்
அடுஞ்சுடர் ஒள¢வாள்
கடிக்கொள் பீலிகவின்
உற்ற களாசித்
தொடக்கம் ஏந்திமுறை
சுற்றி அனந்தம்
படைப்பெ ருந்தலைவர்
பாங்கொடு போற்ற. 40

104 எழில்செ றிந்தஇர
தத்திடை வைகும்
அழலின் வெங்கதிரை
ஆற்றமு னிந்தோன்

உழைய ரிற்பலரை
ஒய்யென நோக்கி
விழுமி தோர்மொழி 41
விளம்புதல் உற்றான்.

105 காமர் வெம்படை
கணிப்பில கொண்ட
சேம மாகியமர் தேரொரு
கோடி
ஏம மோடுகொணர்
வீரென லோடுந்
தாம வேலுழையர்
தாழ்ந்தனர் சென்றார். 42

106 அண்ட ரும்படை
அளப்பில உய்த்துத்
திண்டி றற்கெழுமு
தேரொரு கோடி
கொண்டு வந்துழையர்

கொற்றவன் மைந்தற்
கெண்டி சைப்புறமும்
ஈண்டுறு வித்தார்.
43

107 ஆண்ட கைக்குமரன்
அன்னது காலை
மாண்ட சீர்வலவன்
மாமுகம் நோக்கிப்
பாண்டியன் மாத்தொகுதி
பண்ணின இத்தேர்
தூண்டு கந்தன்அமர்
சூழலின் என்றான்.
44

108 என்ன லும்விழுமி
தேயென முட்கோல்
மன்னு மத்திகையின்
வன்றொழில் காட்டித்
துன்னு வாம்புரவி

யின்தொகை தூண்டிப்
பொன்னந் தேர்கடவி
னான்புகழ் வெய்யோன். 45

109 வெய்ய வன்தனை
வியன்சிறை இட்ட
கையன் ஏகஅது கண்டு
புறஞ்சூழ்
மையல் மால்அவுண
மாப்படை யாவும்
ஒய்யெ னப்பெரிது
லம்பின அன்றே. 46

110 எழுந்த தானவர்
இகற்படை வெள¢ளம்
எழுந்த தேர்நிரை
எழுந்தன கைம்மா
எழுந்த வாசிகள்
எழுந்தன ஓதை

எழுந்த கேதனம் 47
எழுந்தன பூழி.

111 அறைந்த பேரிகை
அறைந்தன சங்கம்
அறைந்த காகளம்
அறைந்தன திண்கோ
டறைந்த சல்லிகை
அறைந்த கடாரி
அறைந்த தண்ணுமை
அறைந்தன தக்கை. 48

112 ஆர்த்த தேர்த்தொகுதி
ஆர்த்தன வாசி
ஆர்த்த தந்திநிரை
ஆர்த்ததனர் வெய்யோர்
ஆர்த்த வால்துவசம்
ஆர்த்தன கண்டை
ஆர்த்த தார்நிரைகள்

ஆர்த்தது மூதூர். 49
113 அதிர்ந்த மாநிலம்
அலைந்தன நாகம்
உதிர்ந்த தாரகை
உலைந்தனர் தேவர்
விதிர்ந்த மேகநிரை
விண்டது மேருப்
பிதிர்ந்து போயின
பிறங்கல்கள் ஏழும். 50
114 ஊழி யான்மதலை ஒங்கு
படைப்பேர்
ஆழி யோடுற அருக்கன்
வெருண்டே
பூழி வான்முகடு
போர்த்தெழல் காணா
வாழி என்றதின் மறைந்து
படா¢ந்தான். 51

115 வாழி மாநகர்
வளைந்திடு தொல்பேர்
ஆழி யாங்கடை
அவப்படை யாகிச்
சூழும் வேலையிடை
தோன்றி யுலாவும்
பூழி தூர்த்துளது பூதர்க
ளேபோல். 52

116 விட்ட சோதிநிமிர்
விண்மிசை தாக்கப்
பட்டு லாவரு
பதாகையின் ஈட்டம்
வட்ட வானமெனும்
வான்பட கத்தைக்
கொட்டு மண்மகள்
குலாவுகை போலும். 53

117 தாழும் வீரர்படை
தம்மின் உரிஞ்சப்
பாழ வெங்கனல் பரந்த
பதாகைச்
சூழல் வானநதி
தோய்ந்தசை காலை
வீழு மாலிகளின் 54
வீழந்திடு கின்ற.
118 வான மோடியன மால்கரி
தள்ளுந்
தான மோடின சரங்களின்
ஓடி
மீன மோடுதிரை
வேலையி னோடும்
கான மோடின களிற்றின
மென்ன. 55
119 செப்பு தற்கரிய சேணகா

தன்னில்
துப்பு மிக்கெழுபு
தொல்படை வெள்ளம்
இப்பு றத்துநெறி
இன்றிஅவ் வானத்
தப்பு றத்தினும்
அளப்பில சென்ற. 56

120 மறந்த ருங்கதிரை
வன்சிறை செய்தோன்
செறிந்த தானையுடன்
இவ்வகை செல்ல
இறந்த சீர்நகரின் இத்திற
மெல்லாம்
அறிந்து நாரதன்
அகன்றிடு கின்றான். 57

121 வான மேல்நெறி
வழிக்கொடு பூதர்

மேன பாசறை வியன்பதி
யுட்போய்
ஞான வாலறிவின்
நாரதன் விண்ணோர்
சேனை காவலன்
அமர்ந்துழி சென்றான். 58
122 சிந்து ரப்பகை சிரத்தவி
சுற்ற
கந்த வேள்இரு
கழற்றுணை காணாப்
புந்தி நாரொடு புகழ்ந்து
வணங்கி
எந்தை கேட்கவென
இன்ன துரைப்பான். 59
123 பூத சேனையொடு
பொள்ளென ஏகி
ஆதி நீயிவண் அமர்ந்தன

யாவும்
தூதர் கூறஉயர் சூரபன்
மாவென்
றோது தீயவன் உயர்ந்து
வெகுண்டான். 60

124 நிகண்ட முற்பகல்
நெடுங்கதி ரோன்பால்
உகண்ட தன்மகனை
ஒல்லை விளித்தே
அகண்ட சேனையொடும்
அன்பிலன் நின்மேல்
வெகுண்டு போர்செய
விடுத்தனன் அம்மா. 61

125 விடுத்த காலையவன்
வெஞ்சமர் ஆற்றற்
கடுத்த கோலமொ
டளப்பில வான

கடற்பெ ரும்படை
கலந்துடன் ஏகத்
தடுப்ப ரும்வெகுளி
தன்னொடும் வந்தான். 62
126 இவனு டன் சமரின்
ஏற்பவர் நீயுஞ்
சிவனும் அன்றியெவர்
தேவரின் உள்ளார்
அவனை வெல்வதரி
தாகும்முன் ஓர்நாட்
புவனி யுண்டவர் புரந்தர
வென்றான். 63
127 கரையி லாவமர்
கடந்திசை கொண்டான்
வரைவி லாதபல
மாயைகள் வல்லான்
உரக வேந்தினும்

உரம்பெரி துள்ளான்
பிரமன் ஈந்திடு
பெரும்படை பெற்றான். 64

128 அறைக டற்கிறைவன்
அங்கைகொள் பாசம்
மறலி தன்பரசு
வவ்வினன் மாயோன்
விறலின் நேமிகொள
வேண்டலன் முன்னஞ்
சிறிய தந்தையணி குற்ற
சிறப்பால். 65

129 ஆகை யால்அவனை
ஆள்கொடு வல்லை
வாகை கொண்டிடலும்
மற்றா¤ தம்மா
பாகு பட்டபடை

பாங்குற நீயே
ஏகல் வேண்டுமட 66
வென்று பகர்ந்தான்.

130 நார தன்இவை
நவின்றிடு காலை
மூரல் எய்திமுரு
கன்புடை நின்ற
வீர வாகுவை
விளித்தருள் செய்து
சீரி தாஇனைய செப்புதல்
உற்றான். 67

131 ஈண்டு பூதரொ
டியாம்வரு தன்மை
யாண்டு சூரனுணா¢ந்
தந்நகர் தன்னின்
மாண்ட தானையுடன்
மைந்தனை நம்மேல்

துண்டி னான்அமர்
தொடங்கிய மன்னோ. 68

132 எள்ளு தற்கரிய எண்மர்
இலக்கர்
உள்ள பேர்களும்
ஓராயிர பூத
வெள¢ள மும்புடையின்
மேவர நீபோய்ப்
பொள்ளெ னப்புரிசை
யின்புடை சூழ்தி. 69

133 சென்று முன்கடை
சிதைத்தனை அங்ஙன்
கன்றி நேரவுணர்
காவலன் மைந்தன்
துன்று சேனைகள்
தொலைத்தமர் ஆற்றி

வென்றி கொண்டவனை
மீளுதி யென்றான். 70

134 ஈரும் வேல்முருகன்
இவ்வகை கூறி
வீர வாகுவை
விடுத்திளை யோரைச்
சார தத்தலைவர்
தம்முடன் ஏவி
நார தற்கிது நவின்றருள்
செய்வான். 71

135 கேட்டி யான்முனிவ
கேழ்கிளர் சிம்புட்
கூட்ட மீதுசில கோளரி
மேவின்
வாட்ட வல்லனகொல்
மாய்குவ தல்லால்
காட்டு வாமுடிவு

காண்டிய தென்றான். 72

136 குமரன் நல்குவிடை
கொண்டு படர்ந்தே
விமல வாலுணர்வின்
மேதகு வீரன்
சிமைய மேருநிகர்
திண்சிலை ஒன்றை
அமரர் கோன்புகழ
அங்கை பிடித்தான். 73

137 வீக்கி னன்கவசம்
வெந்நிடை தன்னில்
தூக்கி னன்பகழி
பெய்திடு தூணி
நீக்க மில்விரலின் நீடுகை
தன்னில்
தாக்கு கோதையொடு
புட்டில் தரித்தான். 74

138 சேம வெம்படை
செறிந்திடு வைய
மாம ருங்கினில்
வரம்பில செல்லத்
தோமில் வீரமிகு
தோளினன் அங்கோர்
ஏம மாமிரத்ம் ஏறினன்
மாதோ. 75

139 எட்டு வீரரும் இலக்கரும்
ஏனை
மட்டில் பூதகண மன்னரு
மாக
ஒட்டி ஆடமர்
உருக்கொடு கொண்மூ
முட்டு தேர்த்தொகையின்
மொய்ம்பொடு புக்கார். 76

140 தேரின் மேற்படு
சிறப்புடை வீரர்
வீர வாகுவை
விரைந்தயல் சூழந்தார்
நேரில் ஆயிர
நெடுங்கதிர் ஒன்றைச்
சூரர் தந்தொகுதி சுற்றிய 77
வாபோல்.

141 விரசி யேயமர்
விளைத்திட வெஞ்சூர்
அரசன் மாநகரின் ஆயிர
வெள¢ளம்
பரிச னங்கள்படர்
மின்கடி தென்னா
முரச றைந்தனர்கள்
ஆயிடை மொய்ம்போர். 78

142 அறைந்த காலைதனில்
ஆயிர வெள்ளம்
நிறைந்த பூதர்நெடு
வேல்முரு கன்பாற்
செறிந்து போற்றியிட
ஏனையர் சென்றார்
உறைந்த ஆர்கலி 79
உடைந்தது போல.

143 அருத்தி யிற்படரும்
ஆயிர வெள்ளக்
கிருத்தி மத்தவர்
கிளர்ந்திடு தீப்போல்
உருத்து வேலையின்
ஒலித்துயர் ஊழி
மருத்தின் வன்மைகொடு
வந்திடு கின்றார். 80

144 பைய ராவிறை பரித்திடு

கின்ற
வையம் யாவையுமொர்
வாகுவின் வைக்குங்
கையர் காலனை
அடுந்தறு கண்ணார்
வெய்ய ரானவர்கள்
யாரினும் வெய்யோர். 81

145 அரத்த வேணியர்
அடும்படை ஏந்துங்
கரத்தர் வெங்கழல்
கத்திடு தாளர்
வரத்தின் மேதகையர்
மாயை கடந்தோ£¢
உரத்தின் அண்டமும்
உடைந்திட வல்லோர். 82

146 இனைய தன்மையினில்

ஈண்டிய பூதர்
அனைவ ருஞ்செல
அவர்க்கிறை யானோர்
தனதுதொல் லிளைஞர்
தம்மொடு சென்றான்
வனைக ருங்கழல்
வயம்புனை வாகு. 83

147 செல்ல லுந்திமிலை
செல்லுறழ் பேரி
கல்லெ னுங்கரடி காகள
மாம்பல்
சல்ல ரிப்பறை தடாரி
உடுக்கை
பல்லி யம்பிற முழங்கின
பாங்கர். 84

148 மாறில்சே னையிடை
வந்தெழு பூழி

நீறுபூ சிமுடி நீடிய
கங்கை
ஆறு தோய்ந்தகல்
விசும்பிடை ஆடி
ஏறுகொண் டகொடி
ஈசனை யொப்ப. 85

149 பாய சாரதர் படைக்குள்
எழுந்தே
ஆய பூழிஅவு ணப்படை
தன்னில்
சேய பூழியொடு
சேர்வன தாமுன்
போயெ திர்ந்தமர்
புரிந்திடு மாபோல்.
86

150 பான்மை இன்னன
படைப்புற எண்ணில்

சேனை வெள¢ளமொடு
திண்டிறல் வாகு
தூந லம்தவறு சூருறை
மூதூர்
வானு லாம்புரிசை மாடுற 87
வந்தான்.
151 வேறு
ஆனதொர் காலையின்
அதனை நோக்குறீஇத்
தானவர் ஒருசிலர்
தரிப்பின் றோடியே
சேனையங் கடலினைத்
தீர்ந்து வல்லைபோய்ப்
பானுவின் பகைஞனைப்
பணிந்து கூறுவார். 88
152 மாயிருந் தானைகள்
மருங்கு சூழ்ந்திட

நீயமர் செயவரு
நிலைமை நாடியே
வேயென முந்திவண்
மேயி னான்றனை
ஏயினன் குமரவேள்
நிகழ்ச்சி ஈதென்றார். 89

153 மற்றிவை அவுணர்கோன்
மதலை கேட்டலுங்
கற்றையங் கதிர்மணிக்
கடகக் கையினை
எற்றினன் முறுவல்செய்
தெயிறு தீயுகச்
செற்றமொ டுயிர்த்திவை
செப்பல் மேயினான். 90

154 இருந்திடு பாலனை
என்னொ டேபொர

விரைந்தெதிர் தூதனை
வியன்ப தாதியாய்ப்
பொருந்திய பூதரைப்
போர்க் ளத்தியான்
துரந்திடு கின்றனன் 91
தொலைந்து போகவே.
155 அந்தர வரைப்பினில்
ஆசை யெட்டினில்
வந்திடும் அளக்கரின்
மற்றை நேமியில்
கந்தனும் ஒற்றனுங்
கணங்கள் யாவருஞ்
சிந்தினர் வெருவியே
திரியக் காண்பனால். 92
156 புன்மைய ராகிய பூதர்
சேனையும்
வன்மையில் தூதனும்

மழலைப் பிள்ளையுந்
தொன்மிடல் ஒருவியே
தொலைந்து போகினும்
என்மன வெகுளியும்
ஏகற் பாலதோ. 93

157 விடுகிலன் அவர்தமை
மேலை ஏற்பெருங்
கடல்திசை முழுவதுங்
கடந்து செல்லினும்
புடையது சுற்றியே
போக்கு றாதிவண்
கொடுவரு கின்றனன்
குறுகிப் பற்றியே. 94

158 மேவலில் அவர்தமை
மேலை நம்பெருங்
காவலன் முன்புறக்
காட்டி இவ்விடைத்

தேவர்கள் தம்மொடுஞ்
சிறையில் வீட்டுவன்
ஏவரும் எனதுசீர்
இறைஞ்சி ஏத்தவே. 95

159 என்றிவை பற்பல
இசைத்துச் சூர்மகன்
கன்றிய மனத்தொடு
கடிது சேறலுந்
துன்றிய அவுணர்தந்
தொறுமுன் போயின
பொன்றிகழ் வடமதிற்
புதவு நீங்கியே. 96

160 ஆனதொர் காலையின்
அடையும் பூதவெஞ்
சேனையின் ஆற்றலுந்
திறலுங் கண்ணுறீஇத்

தானவா¢ கூறுவார்
சமர்கண் டோடிய
வானவா¢ அன்றிவர் 97
வலியர் போலுமால்.

161 என்னினும் இங்கிவர்
எம்மொ டேபொரும்
வன்மையும் உடையரோ
வரம்பில் குன்றெலாம்
பொன்மலை அதனொடு
பொருவ தேயினும்
மின்மினி கதிரினும்
விளங்க வல்லதோ. 98

162 என்றிவை போல்வன
இணையில் தானவர்
ஒன்றல பலபல உரைத்து
வெஞ்சினங்
கன்றிய அழல்விழிக்

கணத்தின் சேனைநேர்
சென்றனர் தெழித்தனர்
சிலைத்த பல்லியம். 99

163 வயிர்த்திடு பூதர்கள்மறலி
என்றுல
கயிர்த்திடும் அவுணரை
நோக்கி அம்புவி
உயிர்த்தொகை
அலைத்தவர் உவர்கொ
லோவெனாச்
செயிர்த்தனர் இடித்தனர்
தீயின் வெம்மையார். 100

164 கரையறு தானவர் தாமுங்
காய்கனல்
புரைதரு சூ£¢விழிப் பூத
வீரரும்
ஒருவரின் ஒருவர்போர்

உடன்று சேறலான்
இருவகை அனிகமும்
இகலின் ஏற்றவே. 101

165 தந்தியின் கரங்களில
தண்டம் ஈந்திடா
வந்தெதிர் தெம்முனை
மாய்ந்து வீடுறச்
சிந்துதி யெனுங்குறி
செப்பிப் பூதர்மேல்
உந்தினர் மீமிசை
உலப்பில் தானவர். 102

166 பகைத்திடு பூதர்கள்
பலரும் நாடியே
திகைத்திவை யாவெனச்
சிந்தித் தையுறத்
தகைத்தடந் தாளவை
தரையின் பாற்படா

துகைத்தனர் பரியெனும்
ஓத வேலையே. 103
167 காரிடைச் சென்றெனக்
களிற்றி னுந்திரை
நீரிடைச் சென்றென நீடு
மாவினும்
போரிடைச் சென்றனர்
புறத்துப் போற்றியே
தேரிடைச் சென்றனர்
வரைவிற் சென்றென. 104
168 அடுகரி நிரையினை
ஆடல் மாக்களைத்
தடநெடுந் தேர்களைத்
தணப்பி லாவகை
கடலினை வளைந்திடு
கரைய தாமெனப்
புடைதனில் சுற்றியே

புவியின் ஏகினார். 105
169 அத்திறம் எதிர்ந்திடும்
அவுணர் பூதர்மேல்
முத்தலை வேற்படை
முசுண்டி தோமரஞ்
சத்தியொ டெழுமழுத்
தண்ட மேமுதல்
எத்திறப் படைகளும்
எடுத்து வீசினார். 106
170 கரங்கொடு
பெரும்படைக் கலங்கள்
யாவையும்
பரங்கொடு வீசிய பதகர்
உட்கிட
மரங்கொடும்
எழுக்கொடும் வரைகொ
டுந்தம

துரங்கொடும் வீசினர்
உலைவில் பூதரே. 107

171 வேறு
செறிந்து நேர்ந்து
செருச்செயும்
எல்லையின்
இறந்த தானவர்
எண்ணிலர் ஆவிபோய்த்
தறிந்த தாளுந் தலையுங்
கழலுமாய்
மறிந்த சாரத ரும்வரம்
பில்லையால். 108

172 மாண்ட சாரதர்
யாக்கையும் மண்மிசை
வீண்ட தானவர்
மெய்களுஞ் செங்களம்

யாண்டு மாகி இருங்கரை
போலுற
நீண்ட நேமியின் நின்றது 109
சோரிநீ£¢.

173 விரவு பூதர்
வெகுண்டுசென்
றொன்னலர்
இரத மோடிர தங்களை
எற்றினார்
கரிக ளாற்கரி
யின்தொகை காதினார்
பரிக ளோடு பரிகளை
மோதினார்.
110

174 ஆளை யாள்கொண்
டடர்த்தனர் ஆங்கவர்
தோளை யேதம

தோள்கொடு தாக்கினார்
தாளி னால்அவர்
தந்தலை சிந்தினார்
கோள ரித்தொகை
மான்அடுங்
கொள்கையார். 111
175 ஏற்ற சாரதர் எற்றிடத்
தானவர்
ஊற்றம் இன்றி
உடைதலும் அவ்வழி
காற்றொ டங்கி
கலந்தன்ன காட்சியான்
ஆற்ற லாளன் 112
அனலிகண் டானரோ.
176 கையின் மேயின
கார்முகம் ஒன்றுதன்
மொய்யின் வாங்கி

முரண்கெழு நாணொலி
செய்ய லோடுமத் தேவர்
வெருக்கொளா
ஐய கோவென்
றலக்கணுற் றாரரோ. 113

177 நாரி யார்ப்பு நணுகலும்
நாற்படை
மூரி யர்ப்பு முகிலிடை
ஆர்ப்பெனும்
பேரி யார்ப்பும் பிறங்கு
பெருங்கடல்
வாரி யார்ப்புந்தம்
வாய்மடிந் திட்டவே. 114

178 கொற்ற வில்லிற்
கொடுங்கனல்
வெங்கணை

முற்று மாரியின் முத்திறந்
தூண்டலுஞ்
செற்று பூதர்தம்
மொய்ம்பினுட் சென்றன
புற்றி னுடு புகுந்திடு 115
பாந்தள்போல்.
179 அங்கி மாப்படை
ஏவலும் அவ்வழிச்
சிங்கன் என்னுந்
திறல்கெழு சாரதன்
எங்கண் உய்தி
இறந்தனை ஈண்டெனாப்
பொங்கு சீற்றம்
புகுந்தனன் புந்திமேல். 116
180 நேர்கொண் டார்த்து
நெடுந்தகை தீயவன்
தேர்கொண் டார்க்குந்

திறற்பரிச் சேக்கையின்
பார்கொண் டார்ப்பப்
பரூஉத்தடக் கைதனில்
தார்கொண் டார்த்திடுந்
தண்டினிற் சாடினான். 117

181 சாடும் எல்லையிற் சாரதி
உந்திய
ஆடல் வாம்பரி ஆவி
யுலந்திட
ஓட லின்றி இரதமங்
குற்றதால்
நீடு கின்ற நிலைப்படு
தேரென. 118

182 மாக்க ளூற்ற மடிவினை
நோக்கியே
தீக்க னற்பெய ரோன்சின
மேற்கொளாத்

தாக்க ணங்குறு
தாழ்சிலை வாங்கியே
ஏக்கள் பூட்டி
இதுவொன்று கூறுவான். 119
183 தடுக்கொ ணாஇச்
சரஞ்சொரிந் துன்னுயிர்
படுத்து வானவர்
பார்த்திடத் தென்றிசை
விடுக்கி லேனெனின்
வெஞ்சம ரத்திடை
எடுக்கி லேன்சிலை
யானெனக் கூறினான். 120
184 சூளிவ் வாறு புகன்று
தொவை¤லா
வாளி யான்மிசை
அங்கியின் பேரினான்
கோளி யார்பய

னாமென்கூற்றுறழ்
வாளி தூண்டி
மறைத்தனன் மேனியே. 121
185 மறைய வேயுடல்
வாளிகள் தூண்டவும்
இறையும் உன்னலன்
இனனலுற் றாழ்கிலன்
பொறையி னோடு
பொருக்கெனப்
போகியத்
தறையின் நின்ற
சயந்தனத் தேறினான். 122
186 நீர்மு கந்த நெடுமுகி
லாமெனத்
தேர்மு கந்தனில் தீயவன்
ஏந்திய
கார்மு கந்தனைக்

கைக்கொடு வாங்கியே
பார்மு கத்துப் பதைப்புற
வீசலும். 123
187 வலக்கை யாலொரு
வானகதை பற்றியே
சிலக்கை ஈர்த்திடுச்
சிங்கனைத் தீயினான்
தலைக்கண் மோதலுந்
தானவர் ஆர்த்தனர்
கலக்க முற்றனர்
கண்டஅத் தேவரே. 124
188 அடித்த தண்டொ
டனலிதன் கைத்தலம்
பிடித்து மற்றொர்
பெருங்கையி னாலவன்
தடித்த மார்பத் தடவரை
சாய்ந்துக

இடிப்பின் முன்மை 125
இசைத்திட எற்றினான்.
189 எற்ற வெய்யவன்
எல்லையில் துன்புறச்
செற்ற மிக்கெழுஞ்
சிங்கனுஞ் செங்கையில்
பற்று தண்டத் தொடுமப்
பதகனைச்
சுற்றி வானந் துணுக்குற
ஆர்த்தனன். 126
190 மாறி லாத அவுணனை
வன்கையால்
சூறை போலவச் சிங்கன்
சுலவலும்
ஈறில் பித்தினி லேமரு
வோன்மிகத்
தேற லார்ந்தெனத்

தேற்றமின் றாயினான். 127

191 ஆர ழற்பெயர் அண்ணல்
அறிவொரீஇச்
சோரும் எல்லையில்
துண்ணென ஏறிய
தேரை விட்டுத் திறலரிப்
பேரினான்
பாரின் எற்றப்
பதைப்பொடு
துஞ்சினான். 128

192 வேறு
அண்டருந் திறலின் மிக்க
அனலிஅங் கிறந்த
வண்ணங்
கண்டனன் கவலா
வுள்ளம் அழலெனக்
கறங்கு கண்ணான்

சண்டன்என் றுரைக்கும்
பேரோன் தடுப்பரும்
படைகள் தன்கை
கொண்டிவன் உயிரை
இன்னே குடிப்பனா
லென்று சென்றான். 129
193 என்றதோர் மாற்றங்
கேளா எரிவிழித் திடியின்
நக்குப்
பொன்றிய அனலி
யங்கைப் போர்கெழு
தண்டம் வாங்கிச்
சென்றனன் விரைவில்
அன்னான் தேர்மிசைப்
பாய்ந்து நீலக்
குன்றெனும் வயிரத்
தோள்மேற் புடைத்தனன்

கூற்றம் உட்க. 130

194 புடைத்தலும் உயிர்த்து
நெஞ்சம் பொம்மெனப்
பொரும லெய்தித்
தடப்பெருந் தேரில்
வீழுஞ் சண்டனும் தனது
செங்கை
எடுத்ததோர் தண்டந்
தன்னால் எதிர்புகுஞ்
சிங்கன் மார்பத்
தடித்தனன் அவனுந்
தானும் ஆரஞர் உழந்து
வீழ்ந்தான். 131

195 அப்பொழுது ததனை
நோக்கி அவுணரின்
மாயன் என்போன்

குப்புறு தடந்தே ரோடுங்
குறுகலும் பூதர் தம்மின்
ஒப்பிலா நீலன்
நேர்போய் ஓச்சினன்
கதையொன் றண்ணல்
முப்புரம் அதனில்
தூண்டு மூரிவான் பகழி 132
யென்ன.

196 போந்ததோர் தண்ட
மாயன் பொருவகல்
மார்பில் தாக்க
மாய்நதனன் போல
நின்று வருந்திமற்
றவன்றன் பாணி
ஏந்துமுத் தலைவேல்
ஒன்றை எறிநதனன்
எழிலா கத்தில்

சாய்ந்தது குருதி நீலன்
தானுமங் கயரா 133
நின்றான்.

197 சிறிதுபோழ் ததனில்
தேறித் திரண்மணிக்
கடகஞ் சேர்த்த
எறுழ்வலித் தடக்கை
தன்னால் எதிர்ந்தவன்
உரத்தின் எற்ற
அறைகழல் மாயன்
தானும் அணங்குற நீலன்
என்போன்
கறைகெழு நாக
மென்னக் கனன்றிது
கருதிச் செய்வான். 134

198 மந்தரந் தழீஇய
தொல்லை வாசுகி

யென்ன மாயன்
சுந்தரத் தடம்பொற்
றோளைத்
துணைக்கையால்
தொடர்ந்து வீக்கிக்
கந்தரந் தன்னில் தீய
கறைசெறி எயிற்றில்
கவ்வி
முந்துறு குருதிச் செந்நர்
குடித்தனன் மொய்ம்பி 135
ளோடும்.
199 சோரிய துண்டு நீலன்
தொல்சினந் துறந்து
நின்றான்
ஆருயிர் உண்டு
போனான் அந்தகன்
அனைய காலை

ழோரிவில் தடக்கை மாயன்
முடிந்தனன் சண்டன்
சிங்கன்
பேரனுர் உழந்தோர்
தேறிப் பின்னும்போர் 136
புரிய லுற்றார்.
கிட்டினர் தடந்தேர் மீது
கிடந்ததண் டேந்திக்
கீழபோய்
ஒட்டினர் ஒருவர் தம்மின்
ஒருவர்மேல் உடன்று
பொங்கி
முட்டினர் இரண்டு
பாலின் முறைமுறை
பெயர்ந்தார்
மொய்ம்பால்
வட்டணை திரிந்து

தண்டில் தாக்கினா£¢ 137
மாற்று கின்றார்.
201 இங்கிது போலப் பல்வே
றியற்கையிற் கதையின்
வெம்போர்
சிங்கனுஞ் சண்டன்
தானுஞ் செய்தனர் திரிந்த
வேலைப்
பொங்கிய பூதர் வேந்தன்
பொருவரும் அவுணன்
பொன்னார்
அங்கையில் தண்டஞ்
சிந்த அடித்தனன்
அணிப்பொற் றண்டால். 138
202 வயிர்த்திடு தண்டம்
அங்கண் வலிகெழு
சிங்கன் மோத

அயிர்த்தொகை ஆத
லோடும் ஆற்றல்சேர்
அவுணர் யாரும்
உயிர்த்தனர் என்கொ
லாமென் றுன்னினர்
உருமே றென்னச்
செயிர்த்தனன் சண்டன்
என்னுஞ் செருவலான் 139
உரக்க லுற்றான்.
203 தண்டமொன் றிற்ற
தென்று தருக்கலை
தடம்பொற் றோளாக்
கொண்டதும் அஃதே
அன்றோ கூற்றுவன்
நகரும் மேலை
அண்டமும் உலையத்
தொன்னாள்

அடர்த்தனன் உனக்கிங்
கஞ்சேன்
மண்டமர் புரிதி என்னா
வலிகெழு கரங்கொண்
டேற்றான். 140

204 ஏற்றனன் இகலும்
வேலை எரிசினங்
கடவிச் சிங்கன்
ஆற்றலை யாங்கொல்
நீயென் றாற்றலை
அணிபொற் றண்டம்
போற்றுகென் றுய்ப்ப
அங்கட் புகாநெறி
புடைத்துக் கையால்
கூற்றனும் உட்க
ஆர்த்ததான் குருமணித்
திரற்தோள் கொட்டி.

141

205 அந்நெடுந் தகையோன்
ஆ£¢ப்ப அதுபொறா
தழன்று சிங்கன்
பொன்னெடுந் தண்டால்
அன்னான் புயமிறப்
புடைத்த லோடுங்
கன்னெடுந் தோளுமம
ஓர்சார் கதுமென முரியத்
தண்டும்
பன்னெடுந் துணியாய்ச்
சிந்திப் படிமிசைக் கிடந்த
தன்றே.

142

206 புயந்தளர்ந் திடலுஞ்
சண்டன் போவது
கரமென் றுன்னா

அயர்ந்திலன் ஒசிபொற்
றோளை அங்கையின்
இறுத்து வாங்கி
வயங்கெழு தண்டிற்
பற்றி வட்டணை
புரிந்தான் வானோர்
வியந்தனர் இவனே
கொல்லாம் வீரருள் வீரன்
என்றே. 143

207 கரங்கெழு புயப்பொற்
றண்டால் கார்கெழு
சண்டன் காமர்
உரங்கெழு உரத்தின்
மோத உருகெழு
மடங்கற் பேரோன்
இரங்கிலன் உவன்போல்
யானும் எற்றலன்

கரங்கொண் டென்னாச்
சரண்கொடே அவன்றன்
ஆகத் தடவரை அதனைச்
சாய்த்தான். 144

208 கண்டகன சாய்த
லோடுங் கரமெடுத்
தார்த்து வானோர்
புண்டருங் கருதிச்
செங்கட் பூதநா யகநீ
அன்றேல்
சண்டனை உதைப்பார்
யாரே தாழ்த்திடல்
அவன்றன் ஆவி
கொண்டருள் இறையின்
என்று குறையிரந் தரைய
லுற்றார். 145

209 வேறு
வானவார் உரைகேளா
மறலியொ
டிகல்வெங்கண்
தானவன் இவனேஎன்
தனிஉயிர்
அடுகிற்பான்
ஈனம துறுதேவர்
இவனொடு
நுமையின்றே
ஊனுடல் உயிரோடும்
உண்குவன்
அதுகாணீர். 146
210 என்னலும்
இகல்சிங்கன் எரிகலுழ்
விழியான்என்
முன்னிது

புகல்கின்றாய்
முடிகுவை
இனியென்னாக்
கொன்னலில்
தருகையால்
கொடிறுடை தரமோத
ஒன்னலன்
அதுபோழ்தின்
ஒலிமுகி
லெனவீழ்ந்தான். 147

211 போழுறு பகுவாயில்
பொலிதரும்
எயிறோடும்
வீழுறு நகையாலும்
விரிகுரு தியினாலுந்
தாழுறு மதிதன்னைத்
தாரகை நிரைசூழ

ஊழுற
அமார¢செவ்வான்
ஒத்ததவ் வுழியன்றே. 148
212 சண்டனும்
இறலோடும் சமன்விட
வருதூதர்
அண்டலர்
வெருவாமுன்
அலமரல் உறுகின்றார்
கண்டனன்
அதுசிங்கன் கையன
துயிர்தன்னைக்
கொண்டணை
குதிரென்னக் குறுகினர்
அதுகொண்டார். 149
213 ஆனதொர்

செயல்பாரா அசமுகன்
எனவோதும்
மானவன்
இறைநில்நில் வந்துன
துயிர்உண்பல்
ஏனைய ரெனவேநீ
எண்ணலை
எனையென்னாக்
கானிமிர் தருதேர்மேற்
கடுவிசை
யொடுசென்றான்.

214 சிங்கன
தெதிர்செல்லுஞ்
செல்லுறழ்
பகுவாயான்
அங்கணு
கிடும்வேலை அதிபல

மதுவென்போன்
எங்கினி அகல்வாய்நீ
இற்றனை
இவண்என்னாப்
பொங்கிய
சினமோடும்
பொள்ளென
விடைபுக்கான். 151

215 செந்தழல்
புரைவெங்கட்
டிறல்அச
முகன்என்போன்
முந்துற மதுவென்னும்
மொய்ம்பினன்
எதிர்கோடல்
அந்தக னொடுகாலன்
அமர்புரி தரவேமுன்

வந்தெதிர்
எதிர்தன்மை மானுவ
தெனலாமால். 152
216 அணுகினர்
இருவோரும்
அசமுகன்
அதுகாலைக்
குணநனி
சிலைகொள்ளக்
குலவிய
சிலைகொள்ளாக்
கணிகையர்
மிளிர்வேற்கட்
கடைநில வியதென்ன
நுணுகிய நுதிவெங்க
ணோன்கணை
சிதறுற்றான். 153

217 முன்னது வரலோடும்
முகனுறு
செயலோரான்
துன்னுபு
செறிபோழ்துந்
துணைவிழி
இமையாதான்
தன்னிலை
இறையேனுந்
தவிர்கிலன் ஒருதானே
அந்நிலை
தனில்நின்றான்
அடுதிறல்
முயல்கின்றான். 154
218 பாலுற நிமிர்கின்ற
பழுமர மதுபற்றா
மேலுறு சரம்வீசான்

விடுகணை
படமெய்யில்
சாலிகை
யெனநின்றான்
தகுவன திரதத்தில்
காலென
விசைசென்றே
கருமுகி 155
லெனஆர்த்தான்.
219 ஆர்த்தனன்
அதுகேளா அசமுகன்
அயர்வெய்தித்
தேர்த்தனில் நிலமீதிற்
சிலையொடு
கணைசிந்தி
வேர்த்தனன்
வறிதுற்றான்

விம்மினன்
மெலிதன்மை
பார்த்தனன்
மதுவென்போன்
இவையிவை
பகர்கின்றான். 156

220 வீரனும் அலைஎஞ்சா
வெஞ்சமர்
வலன்எய்தச்
சூரனும் அலைநின்றே
சூர்நிலை அதுகாணுந்
தீரனும் அலைஎன்னே
செருமுய லுதிநீநின்
ஆருயிர்
கொடுபோகென்
றவனியின்
மிசைபோனான்.

157

221 பாரிடன் நிலன்மேவப்
பகர்அச
முகன்என்னும்
பேருடை
யவன்வெள¢கிப்
பெருமிதம் இலனாகிப்
போரிடை
வெருவுற்றேன்
எனவொரு
புரையுற்றேன்
ஆரிடை யிதுதீர்வ
னெனஅல
மருகின்றான். 158

222 ஆயிடை
அவுணன்தான்
அமா¢புரி கிலனாகிப்

போயினன்
அவன்அந்தோ
பொன்றுதல்
இனிதென்னாக்
காயமொ டுளமானக்
கனல்சுட மனம்வேவத்
தீயென
வெகுளூற்றான்
செருமுயல்
திறல்பெற்றான்.

159

223 ஒல்லையின்
அவன்ஏகி யுழிதனி
தொடராநிற்
கொல்லுவன்
இனியாண்டுக்
குறுகினும் அகலாதே

நில்லுநில் லெனவாரா
நீனிற முகிலென்னச்
செல்லுறழ்
பகுவாயால்
திசைசெவி
டுறஆர்த்தான்.
224 அற்றமில்
மதுவென்போன்
அசமுகன்
உரைகேளாக்
கற்றதும்
உளகொல்லோ
கழறினை சிலவீரம்
பெற்றிலை
யெனைநாடிப்
பெயருதல்
பிழைளேனும்

உற்றலை
இசையெற்கோர்
உறுபழி தருகின்றாய். 161
225 என்றிது
புகல்கின்றோன்
எதிருற
இகலிப்போய்ப்
பொன்றிகழ்
சிலைகோலிப்
பொறியுமிழ்
பிறைவாளி
ஒன்றல பலவுய்ப்பப
உருகெழு சினமெய்தி
நின்றனன்
அவையாவும்
நெடியகை கொடுவீசி. 162
226 வேறு

வைத்தலைப்
பகழிமேல் விடுப்ப
மாமது
எய்த்திலன்
இறையுமென்
றெண்ணி எண்ணலன்
முத்தலைக் கழுவயின்
முசலம் ஆதியாங்
கைத்தலப்
படையெலாஞ் சிதறுங் 163
காலையே.
227 சாரதன் மெய்யுறத்
தளர்ந்து தானவன்
தேரினை விரைந்துதன்
செங்கை யாலெடா
வாரிதி மேற்செல
விடுப்ப வஞ்சகன்

பாரிடை ஒல்லையிற்
பாய்ந்து மேயினான். 164

228 குப்புறு கின்றவன்
கூளி வேந்தன்முன்
வெப்பமொ டணுகுறா
வீங்கு தோளினால்
துப்புறு மற்றொழில்
தொடங்க வானகத்
தப்புறம் அவனசெல
அடிகொண்
டோச்சினான். 165

229 வெய்தென
இறந்துவான் மீண்டு
பூதன்முன்
எய்தினன் அவனுரத்
திடியின் எற்றியே
வைதனன் போயினன்

மறைந்து மற்றொரு
கைதவம்
நினைந்தனன் ககனம்
புக்குளான். 166

230 வரந்தனிற்
பெற்றதோ£¢ மாயன்
நேமியைக்
கரந்தனில் எடுத்தனன்
கருத்தில் அர்ச்சனை
புரிந்தனன்
தொழுதனன்
போற்றிப் பூதன்மேல்
விரைந்துற
விடுத்தனன் விளிந்
தன்மையான். 167

231 மாசுறும் அசமுகன்

மதுவின் ஆகமேற்
பாசனம் வியப்பமால்
பரிதி உய்த்தலும்
காசினி அவன்வெறுங்
கரத்தன் ஆதலின்
வீசிய அப்படை
வெகுண்டு மீண்டதே. 168
232 கணையிருள்
உருவினைக் கனலி
சேர்ந்தென
முனைகெழும்
அசமுகன் முடியை
அட்டதால்
தனதுகை நேமிதன்
னால்உ றாததோர்
வினையிலை என்பது
மெய்மை போலுமால். 169

233 உலந்தனன் அசமுகன்
உருமு வீழ்ந்தென
நிலந்தனில் வீழ்தலும்
நின்ற தானவர்
புலந்தனர் ஆழிமால்
புடையிற் போயது
தொலைந்ததின்
றமரெனா அமரர்
துள்ளவே. 170
234 சாற்றிய அவுணர்தந்
தலைவர் ஏனையர்
நாற்றிறப் படையொடு
நடந்து தம்முளஞ்
சீற்றம தாகியே செவி
ளைத்தலும்
ஏற்றெதிர் சாரதர்
இரிந்து போயினார். 171

235 வெற்றிகொள் தானவர்
வெகுண்டு
போர்செயப்
பற்றல ராகிய பாரி
டத்தவர்
இற்றனர் வன்மையை
இரிந்து போயினார்
மற்றது கண்டனன்
வலிய தணடகன். 172
236 வேறு
ஏற்ற மாகும்
இலக்கவில் வீரருட்
சாற்று பேரிசைத்
தண்டகப் பேரினான்
கூற்றை நேர்வ
தொருசிலை
கோட்டியே

மாற்ற லார்மிசை
வாளிகள் தூவினான். 173

237 மின்னு நாரி
வியன்சிலை யேசிலை
துன்னு நாணொலி
சூருரு மேற்றொலி
பொன்னின் வாளி
மழைபொழிந்
திட்டதான்
மன்னு தண்டக
மாப்பெருங்
கொண்டலே. 174

238 தட்டின்
மொய்ம்புடைத்
தண்டக மேலையோன்
விட்ட வாளிகள்

வெய்யவர் தானையுட்
பட்ட காலைப்
பரந்தெழு சோரிநீர்
மட்டி லாத 175
குடிஞையின் வந்ததே.
239 இரதம் இற்றன
எண்ணில வண்ணமார்
பரிகள் பட்டன பற்பல
மாமதக்
கரிகள் பட்ட
கணிப்பில எண்ணிலா
அரிகள் நேர்அவு
ணப்படை பட்டதே. 176
240 இந்த வாறிவர் பட்டிட
ஏனையோர்
நொந்து தம்முயிர்

காப்ப நுதலியே
சிந்தி யேயெண்
டிசையினும் பாரினும்
அந்த ரத்தினு 177
மாய்இரிந் தோடினார்.
241 வேறு
தண்டா அவுணப்
படையிவ்வகை
சாய்ந்த வாறும்
எண்டா னைமள்ளர்
பலர்அங்கண் இறந்த
வாறும்
விண்டாழ் கதிரைச்
சிறைபூட்டிய வீர
வீரன்
கண்டான்
வெகுண்டான்

நகைத்தொன்று கழறு 178
கின்றான்

242 மட்டார் தெரியல்
மகவான் முதல் வானு
ளோர்கள்
எட்டாத சேணில்
தொலைவெய்தி
இரிந்து போக
வட்டாடல் செய்த
நமரங்களின் றாவி
மாண்டு
பட்டா£¢கொல் ஈசன்
மகன்ஏவு படைகள்
தம்மால். 179

243 எல்லார் கதிரைச்
சிறைபூட்டிய யானும்
நிற்க

ஒல்லார்கள் ஆற்றல்
உளராயடும் ஊறறம்
நான்றால்
கொல்லாது சீற்றம்
இலதாய்இகல்
கொண்டு றாதேல்
வெல்லாது கொல்லோ
அரிதன்னையும்
வேழம் எல்லாம். 180

244 வாரார் கழற்கால்
அமராரட மாய்ந்த
வெள¢ளம்
ஈரா யிரத்தின்
மிகுமல்லதை எஞசு
றாதால்
பேராமல் என்பாங்
கரின்நிற்பன் பேசில்

வெள¢ளம்
ஓரா யிரமே இரிகின்ற
தொழிந்த தெல்லாம். 181

245 ஒன்றே வரிவில்
ஒருவேன்பிடித்
தொன்ன லார்மேற்
சென்றே அடல்செய்
திலன்முன்னமென்
சேனை யெல்லாங்
கொன்றே னியானே
பொரவிட்டனன்
கூழை தன்னின்
நின்றேன் இ·தோர்
பொருளென்று
நினைந்தி லேனால். 182
246 தீருஞ் செயலை

நினைந்தாவதென்
செனறி யானே
ஒரொன்று கன்னல்
முடிகின்றமுன் ஒன்ன
லார்தம்
பேரின் றெனவே
அடுவேனது பெற்றி
லேனேல்
சூரன் குமரன்
அலன்யானெனச்
சூள்மொ ழிந்தான். 183
247 பானுப் பகைவன்
இவைகூறிப் பரிதி
மான்தேர்
மானக் கடுங்கோல்
வலவன் மரபிற்
கடாவச்

சேனைக் கடலி
னுடன்சென்றுதன்
செங்கை தன்னில்
கூனற் சிலையைப்
புருவத் தினொடு
குனித்தான். 184
248 மேதக்க தன்கைச்
சிலைவாங்கி
விளங்கும் வெள¢ளி
சோதிக் கிறையாயுறும்
எல்லையிற் சூல்கொள்
மேகம்
மூதக்க பாரிற்
சொரிந்தென்ன
முனிந்து நேரும்
பூதப் படைமேற்
பரமாரி பொழிதல்

உற்றான். 185

249 பொழிகின்ற காலைத்
திறன்மேதகு பூதர்
நோக்கிக்
குழிகின்ற கண்ணின்
அழல்காலக் குலாச
லங்கள்
ஒழிகின்ற வெற்பு
முழுதும்பறித்
தொல்லை வீசி
அழிகின்ற காலத்
துருமேறென ஆர்த்து
நின்றார். 186

250 என்றின் பகைஞன்
தனைபூதா¢கள்
யாரும் வீசுங்
குன்றம் பலவும்

புடைசுற்றக் குறித்து
நோக்கி
ஒன்றங் கதனுக்
கொருகோடி
ஒண்கோல தாகத்
துன்றும் படியே
முறைதூண்டித்
துகள்செய் திட்டான். 187
251 வண்டுது பூந்தாரவன்
வாளியின் மாய்ந்த
குன்றம்
நுண்டுளி யாகியது
வானிடை நொய்தின்
ஏகி
விண்டூர்க டோறுஞ்
செறிகின்றவர் மேனி
தோயக்

கண்டுதி ஆற்றாதவர்
விண்ணிடைக் கங்கை
புக்கார். 188

252 தேவுத் தடந்தேர்
ஒருவன்செரு
வெல்லை முற்றும்
மேவிக் கறங்கில்
திரிவான்றனி வில்லை
வாங்கிக்
கோவைத்
தொடையொன்
றினில்ஆயிர கோடி
வாளி
தூவக் கணத்தின்
தொகைமுற்றுந்
தொலைவு செய்தான். 189

253 நன்கா லநீவி

மிளிர்கின்ற நறுசெய்
தோய்ந்த
மின்கா லதனின்
விரைகின்ற செந்தீயின்
வெய்ய
முன்காலு கின்ற
சுடருள்ளன மூன்று
கண்ண
வன்காலன் அஞ்ச
அடவல்லன வஞ்சன் 190
வாளி.

254 தோளைத் துணிக்குங்
கரத்தோடு துணிக்கு
மார்பைத்
தாளைத் துணிக்கும்
எரிகுஞ்சித் தலைது
ணிக்கும்

வாளைத் துணிக்கும்
அணிமெய்வயப் பூதர்
வாழ்க்கை
நாளைத் துணிக்கும்
அசுரன்விடு நாம 191
வெங்கோல்.
255 சூரற் கினிய
மகன்வாளி துணித்து
வீச
வீரத்தின் மிக்க
கணத்தின்றலை வீழு
முன்னர்ச்
சீருற்ற சோரிப்
புனல்சிந்துவ
தீயர்சென்ற
பாரைப் புனிதஞ்
செயுந்தன்மை

படைத்த தன்றே. 192

256 பொன்செய் றிலங்குங்
கணைத்தள்ளலும்
பூதர் சென்னி
மின்சென்ற வானத்
தெழச்சோரியு மீதெ
ழுந்த
என்சென் றனையாங்
குமரன்படை ஏக
லென்னாப்
பின்சென்று பற்றித்
தருவான்றொடர்
பெற்றி போலும். 193

257 எய்யுந் தொழிலுக்
கவன்மேலவர் யாவர்
எங்கள்
ஐயன் வடையாகிய

பூதர்தம் மாற்றல்
மொய்ம்புங்
கையும் வரையுஞ்
சிரமுங் கழற்காலும்
மார்பும்
ஒய்யென் றறுக்கும்
அவுணன்விடும்
ஒன்றொர் வாளி. 194
258 வானோர்
தொகையைச்
சிறையிட்டவன்
மற்றிவ் வாறு
தானோர் சிலையின்
வலியாலடத் தாவில்
பூதர்
ஆனோர்
அளப்பில்லவர்

மாய்ந்திட ஆற்ற
லில்லா
ஏனோர்கள் யாரும்
உடையவார்இவை 195
எண்ண லுற்றார்.

259 மின்னும்
புகர்வேலவன்
அங்குளன் வீர வாகு
பின்னின்றனன் ஈதுண
ரான்பிற ராரு மற்றே
முன்னின்ற நம்மை
இவன்அட்டிடு
மொய்ம்பி லேம்யாம்
என்னிங்கு நிற்ப
தெனப்பூதர் இரிந்து
போனார். 196

260 இரிகின்ற பூதர்

எவரும் படைக்கீற்றின்
நின்ற
வரிகின்ற தண்டார்
அடல்மொய்ம்புடை
வள்ளல் பாங்கர்ப்
பரிகின்ற நெஞ்சத்
தொடுசெல்லவப்
பான்மை யாவுந்
தெரிகின்றனன்
உக்கிரன் என்பதொர்
சேனை வேந்தன். 197
261 கண்டுக் கிரனாகிய
பூதன் கனன்று
செங்கண்
விண்டிற் பெரிது
நிவப்புற்று விளங்கு
பொன்னந்

தண்டப்படை
ஒன்றினை
அங்கையில் தாங்கி
யேகி
அண்டத் தவர்கள்
புகழத்தனி ஆர்த்து
நேர்ந்தான். 198

262 செற்றத்துடன்
உக்கிரன் நேர்புகு
செய்கை தன்னைக்
கற்றைக்கதி ரைத்தளை
இட்டவன் கண்டு
தன்கைக்
கொற்றச்சிலை
யைக்குனித் தாயிர
கோடி வாளி
முற்றத்துரந் தேயவன்

யாக்கையை மூடி
ஆர்த்தான். 199

263 மைக்கின்ற மேனி
நெடும்பூதனை
வஞ்சன் வாளி
தைக்கின்றில வானுதி
மாய்ந்து தளர்ந்து
வீழ்ந்த
மெய்க்கின்ற இன்பும்
அறனும் விளையாது
வாளா
பொய்க்கின்ற
வன்கைப்
பொருள்வல்லையிற்
போ தேபோல். 200

264 விடுகின்ற வாளி
பயனின்றயல் வீழ்த

லோடும்
படுகின்ற தன்மை
யதுகண்டனன் பானு
கோபன்
அடுகின்ற தெவ்வா
றிவன்றன்னையென்
றங்கண் வானந்
தொடுகின்ற தாங்கோ
ரெழுவத்தைச் சுழற்றி
விட்டான். 201

265 தீயன்முச லந்தனை
உக்கிரன் செங்கை
தாங்கும்
ஆய்திண்கதை
யாற்சிதைத் தேயவன்
தேரை அண்மிப்
பாயும்பரி

யைப்புடைத்
தொல்லையிற் பாரின்
வீட்ட
வேயென்று
பல்காலிகழ்ந்
தா£¢த்தனர் யாரும்
வானோர்.
202

266 புரவித் தொகுதி
விளிவாகப்
பொருவின் மைந்தன்
எரியிற் கனன்று
புடைஓ ரிரதத்தின்
வாவி
வா¤விற் குளித்துக்
கிரன்ஏந்தும் வலிய
தண்டம்

முரிவுற்றிட
வேயொரு நூறு
மொட்டம்பு 203
தொட்டான்.
267 நூறொண்கணை
யால்அவன்
தண்டம்நுண் டூள
தாகச்
சீறுந்திறல் உக்கிரன்
கைக்கொடு தீயன்
மைந்தன்
ஏறுந்தடந் தேர்தனை
வானின் எடுத்து வீச
வீறும் பரிதி
பதத்தின்துணை மேய
தன்றே.
204

268 துன்னான் மதலை
வருகின்றது சூரன்
நோக்கி
முன்னாளின் நின்று
நமைப்பற்ற முயன்று
ளான்கொல்
அன்னான் புணர்ப்பை
உணரேன்அணித்
தாகும் இன்னம்
என்னா வதோவென்
றுளத்துன்னி இரிந்து 205
போனான்.

269 தேரோடு சென்ற
அசுரன்மகன் சேணின்
மீண்டு
பாரோடு சேர்வான்
வருகின்ற பரிசு

நோக்கில்
காரோடு வானந்
தவறுற்றுழிக் காமர்
தாருத்
தூரோடு சாய்ந்து
மறிகின்றதொர்
தோற்றம் ஒக்கும். 206
வேறு
வீழு கின்றதேர்
ஒருவியே
வெங்கதிர்ப் பகைஞன்
தாழு மெய்யுடை
உக்கிரன் தன்னைவந்
தணுகி
மாழை
யொண்கையால்
எற்றியே எடுத்துவா

னுலகோர்
ஏழை யுங்கடந்
தப்புறஞ் சென்றிட
எறிந்தான். 207
271 எறியும் வெய்யவன்
வேறொரு தேரின்மே
லேறி
வெள¤கொள்
பங்கயத் தண்ணலார்
விதித்துமுன் னளித்த
செறியு மூவிலை
இருதலை வேலினைச்
சேண்போய்
மறியும் உக்கிரன்
எதிர்புக விடுத்தனன்
மன்னோ.
208

272 விடுத்த தெய்வவேல
உக்கிரன் மருமத்தை
விடர்போற்
படுத்தி யேபுகுந்
தப்புறம் போந்திடப்
பாரின்
அடுத்து மற்றவன்
சிறியதர் வுற்றனன்
அதுகண்
டெடுத்த குன்றொடுந்
தண்டியென்
றுரைப்பவன்

எதிர்ந்தான்.
273 தண்டி யாகிய
பாரிடன் தனதுகைத்
தலத்தின்
மிண்டு கின்றதோர்

அடுக்கலை
அவன்மிசை வீசக்
கொண்ட வார்சிலை
வாங்கி ஆயிரங்கணை
கோத்துக்
கண்ட துண்டம
தாக்கினன்
அதனையோர்
கணத்தில்.0 210

274 வெற்பு நுண்டுகள்
ஆதலும் விண்ணுற
நிமிர்ந்து
கற்ப கம்புரை
மராமரம் ஒன்றினைக்
களைந்து
வற்பு றுங்கரந்
தனினெடுத்

தவுணர்கோன்
மணித்தேர்
முற்பு குந்திடும்
பரிகளைப்
புடைத்தனன்
மொய்ம்பால்.

211

மொய்ம்பி னிற்புடைத்
திடுதலுங் கவனமா
முழுதும்
அம்பு வித்தலை
மறிந்தன அதற்குமுன்
அவுணன்
பைம்பொன்
முத்தலைப் பலபதி
னாயிரம் பகழி
செம்பு னற்கொளத்

தண்டிதன் நெற்றியுட் 212
செறித்தான்.
276 செறித்த காலையின்
மெலிந்தனன்
தண்டியச் செய்கை
குறித்து நோக்கியே
பினாகியாம் பூதனோர்
குன்றம்
பறித்து வீசுவான்
முயறலும் ஆயிரம்
பகழி
நிறத்தின் மூழ்குமா
றெய்தனன்
அனையனும்
நின்றான். 213
277 குன்று கொண்டகைப்
பினாகியுந் தொல்வலி

குறைந்து
நின்ற காலையி
வேனைய பூதரும்
நேர்ந்து
சென்று வீற்றுவீற்
றமரினைச் சிலபொழு
தியற்றி
ஒன்று தீங்கதிர்ப்
பகைஞனுக் காற்றலர் 214
உடைந்தார்.
278 எண்ட ருங்கணத்
தலைவர்கள்
தொலைதலும்
இதனைக்
கண்டு வெஞ்சினந்
திருகியே
எதி£¢ந்தனர் கபாலி

அண்ட லோசனன்
நிரஞ்சனன்
உருத்திரன் அகண்டன்
தண்ட கன்முதல்
இலக்கமா கியபடைத்
தலைவர். 215

279 மிடல்ப டைத்திடும்
இலக்கமாம் வீரரும்
விரவித்
தடம ணிப்பெருந்
தேரொடும்
அவுணன்முன் சார்ந்து
சுடரு டைக்கட
கங்கிளர் செங்கையில
துன்னுங்
கொடும ரத்தினைக்
குனித்தனர் நாணொலி

கொண்டார். 216

280 கவடு பட்டிடும் ஈரிரு
மருப்புடைக் ககுபக்
குவடு பட்டதை
உரைப்பதெ
னொருகரிக்
கொம்பாற்
சுவடு பட்டிடு
மேருவுஞ் சலித்தது
துளங்கிச்
செவிடு பட்டன
வானமும் வையமுந்
திசையும். 217

281 பானு கோபன்மற்
றதுகண்டு சிறுநகை
படைத்து
மான வெஞ்சிலை

யொன்றினைத்
தோள்கொடு வணக்கி
மேன லந்திகழ
அண்டங்கள்
யாவையும் வெருவத்
தேனின் வீழ்ச்சியை
மலைந்திடுங்
குணத்தொலி 218
செய்தான்.
282 உலத்தின் மேற்படு
மொய்ம்புடை
இலக்கரும் ஒருங்கே
வலத்தில் வெஞ்சிலை
இடத்தினில்
வடிக்கணை தொடுத்து
நிலத்தில் வந்துகார்
நெடும்புனல் சிதறிய

நெறிபோற்
புலத்தி யன்முறைப்
பேரன்மேல்
தலைத்தலை
போழிந்தார். 219
283 தொடலை அம்புயத்
திலக்கமாம்
பொருநருந் தொடுத்து
விடுச ரத்தொகை
அவுணன்மேல்
வீற்றுவீற் றேகல்
நெடிய தெண்டிரைப்
பேரியா றெண்ணில
நிரந்து
புடவி கொண்டதோர்
அளக்கர்மேற்
போவன போலும். 0 220

284 இலக்கர் விட்டிடு
சரமெலாம்
அவுணர்கள் எவருங்
கலக்க முற்றிட
வருதலுஞ் சூ£¢மகன்
கண்டே
கொலைக்கொ
டுஞ்சிலை
வளைத்ததில் ஆயிர
கோடி
விலக்க ருங்கணை
தொத்தவை
அறுத்தனன்
விரைவில். 221

285 அறுத்து மற்றுமோ
ராயிர கோடிஅம்
பதனைச்

செறுத்து விட்டிட
அறுமுகன் பரிசனர்
தெரிந்து
விறற்க டுங்கணை
யாங்கதற்
கெழுமையால்
விடுத்து
மறித்து மீண்டிடு
வித்தனா¢
அவுணர்கோன் வாளி. 222

286 அறந்தி றம்பிய
சூர்மகன் வாளிகள்
அனைத்தும்
முறிந்து மற்றவன்
தன்மிசை உற்றன
முழங்கிச்
செறிந்த மாமுகில்

உயிர்த்திடுஞ் சீகரஞ்
செல்லா
தெறிந்து கால்பொர
வந்துழி மீண்டுபோம்
இயல்போல். 223

287 செங்க திர்ப்பகை
சீறியே செயிரிலா
வயிரத்
துங்க வெங்கணை
அபரித மிசைமிசை
துரந்து
வெங்கண் வீரா¢கள்
செலுத்திய சரமெலாம்
விலக்கி
அங்கை யிற்கொண்ட
கார்முகம் இலக்கமும்

அறுத்தான். 224

288 பிடித்த கார்முகம்
அற்றுழி மானவர்
பெயர்த்துந்
தடத்த தேரிடை
இருந்திடுஞ் சேமமாந்
தனுக்கள்
எடுத்து வாங்கியே
சரந்துரந் திரவியம்
பகைஞன்
தொடுத்து மேவிடுங்
கணைகளை
இடையிடை 225
துணித்தார்.

289 சூரன் மாமகன்
தொடுசரந்
துணித்தபின் தூண்டுந்

தேரி லாயிரம்
பரியினூ றாயிரந்
தெழிக்
காரு லாவரு
பதாகையில் ஆயிரங்
கடவி
ஊரும் வன்மைசோ¢
வலவன்மேல் ஆயிரம் 226
உய்த்தார்.
வசையில் வீரர்கள்
இவ்வகை விடுத்தலும்
மனத்திற்
பசையில் சூர்மகன்
இரதமும் பரிகளும்
பாகும்
அசனி கொண்டதோர்
துசவமும் அற்றன

அதற்பின்
விசையில் வேறொரு
தேரிடைப்
பாய்ந்தனன்
வெகுண்டு. 227

291 வைய மேற்செலும்
அவுணர்கோன்
தன்சிலை வணக்கிச்
செய்ய கூர்ங்கணை
நூறுநூ றாயிரஞ்
செலுத்தி
ஐயன் விட்டவர்
தேரொடு சிலைகளை
அறுத்து
மெய்யி டந்தொறும்
அழுத்தினன்
எண்ணிலா விசிகம். 228

292 பரிதி மாற்றலன்
பகழிகள்
மெய்யெலாம் பட்டுக்
குருதி சோ£¢தலும்
இலக்கருந் தொல்வலி
குறைந்து
பெரிது நோயுழந்
தாற்றல ராகியே
பின்னர்ப்
பொருதி றந்தனை
நினைந்திலர்
உடைந்துபின்
போனார். 229

293 வற்பு றுத்திய
இலக்கம்வில்
லாளரும் மலைய
விற்பி டித்தவன்

ஒருவனே யாரையும்
வென்றான்
முற்ப கற்புரி
தவப்பயன் இ·தென
மொழிமோ
கற்பி னாற்றலென்
றுரைத்துமோ கழறுவ
தெவையே. 230

294 ஆன காலையில்
வீரகோ ளரியென
அறையும்
மான வீரன்மற்
றதுகண்டு தனதுவில்
வளைத்துப்
பானு கோபன்முன்
னெய்தியே
பிறைமுகப் பகழி

சோனை மாரியும்
விம்மித முற்றிடச்
சொரிந்தான். 231

295 சொரிந்த காலையில்
அதுகண்டு சூரன்மா
மதலை
சிரந்து ளக்கியே
ஈங்கிவன் ஆற்றலுந்
திறலும்
பெருந்த னிச்சிலை
விஞ்சையும்
நன்றெனப் பேசி
வரிந்த கார்முகங்
குனித்தனன்
பனித்தனன் வானோர். 232

296 குனித்த சாபத்தின்

நூறுநூ றாயிர கோடி
நுனித்த வச்சிர
நொறிலுடைப்
பகழிகள் நூக்கித்
தனித்து நேர்ந்தவன்
விடுத்திடு சரமெலாந்
தடிந்து
துனித்தி டக்கணை
ஆயிரம் அழுத்தினன்
தோள்மேல். 233
297 தோளில் ஆயிரம்
வெங்கணை
அழுத்தலுந் தோலாக்
கோள ரித்திறற்
பேரினன் கோமகன்
துரந்த
வாளி யாவையும்

விலக்கியே ஆங்கவன்
மருமஞ்
சாள ரம்படச்
செறித்தனன் ஆயிரஞ்
சரங்கள். 234

298 சரங்கள் ஆயிரம்
அகலமேல்
அழுத்தலுந் தகுவன்
இரங்கி நோயுழந்
தாற்றவும் முனிவுசெய்
திவனைக்
கரங்கொள்
வில்லினால் வெல்லரி
தாமெனக் கருதி
உரங்கொள்
விண்டுவின்
படைக்கலந்

தனையெடுந்
துய்த்தான். 235
299 நார ணன்படை
ஆங்கவன்
உருக்கொடு நடந்து
வீர கோளரி விடுத்திடு
சரமெலாம் விழுங்கிப்
பாரும் அண்டமும்
நடுக்குற இடிக்குரற்
பகுவாய்க்
காரி ரிந்திட
ஆர்ப்பொடு
கடிதுசென் றதுவே. 236
300 விண்டு வின்படை
அணுகலும் விறலரி
யதனைக்
கண்டு மால்படை

எடுக்குமுன் அப்படை
கடிதாய்
வண்டு லாந்தொடை
மார்பிடம் புகுந்துமன்
னுயிரை
உண்ட தில்லையால்
அவசமாக் கியதவ
னுணர்வை. 237
301 அண்ணல் ஏந்திடும்
வேற்படை
ஆணையால்
அனையான்
உண்ணி லாவுயிர்
கொளவஞ்சி
எருவைநீ ருண்டு
கண்ண னார்படை
சிறிதுதன் வன்மையுங்

காட்டித்
துண்ணெ னப்பின்னர்
மீண்டது சூர்மகன்
தன்பால். 238

302 மீண்ட காலையில்
வீரகோ ளரிஅவண்
வீழ்ந்து
மாண்டு ளான்என
மயங்கினன் அங்கது
வயமார்த்
தாண்டன் என்பவன்
கண்டுதன் தனிச்சிலை
குனித்து
மூண்ட செற்றமொ
டணுகினன்
கதிர்ப்பகை முன்னர். 239

303 ஓங்கல் வாகுடை
வீரன்நேர்ந்
திடுமுன்ஒண் கையில்
தாங்கும் வில்லினை
அவுணனோ ராயிரஞ்
சரத்தால்
ஆங்க னந்துணித்
தாயிரங் கணைநுதல்
அழுத்த
ஏங்கி னார்சுரர்
அனையன்வே
றொருசிலை 240
எடுத்தான்.
304 எடுத்த கார்முகம்
வாங்குமுன் இரவியம்
பகைஞன்
தொடுத்து நூறுகோல்

அதனையும் ஓரிரு
துணியாப்
படுத்தொ ராயிரம்
பகழியால் தேரொடும்
பரியை
முடித்து வாளியோ
ரேழுநூ றுய்த்தனன் 241
மொய்ம்பில்.
305 தேர ழிந்திடச்
சிலையதும்
அழிந்திடத் திறல்சேர்
பேர ழிந்திடத்
தனிமையாய்
நின்றவன் பிரியா
ஊர ழிந்திட
வறியனாம்
பரிதிபோல் உற்றான்

கார ழிந்திட
ஆர்த்தனன்
கிளர்ந்தெழுங்
கதத்தான். 242

306 பராக மாப்புவி
அகழ்ந்திடு
பணைமருப் பிரட்டை
வராக மாயிரத்
தாற்றல்பெற்
றுடையசூர் மகன்மேல்
விராக நெஞ்சுடை
விறற்கதிர்
பாய்ந்தனன்
விண்மேல்
இராகு வின்மிசைத்
தினகரன் வாவினா
னென்ன. 243

307 பாய்ந்து திண்டிறல்
வெய்யவன்
வெய்யவன்
பகைஞன்
ஏந்து வார்சிலை
பறித்திரு துணிபடுத்
தெறிய
வேந்தன் மாமகன்
வெகுண்டுதன்
மருங்கிடை விசித்த
நாந்த கம்முரீஇக்
குற்றினன் மருமத்தின்
நடுவண். 244

308 வீர வெயயவன்
உரமிசைச் செலுத்திய
வெங்கட்

கூரும் வாட்படை
வாங்குமுன்
ஆங்கவன் குருதி
சூரி யன்பகை
அகலம்வந் துற்றது
தூயோன்
தாரை வாளொன்று
மாறுபோய்க் குற்றிய
தகவின்.
309 குற்றி வாங்குமுன்
வீரமார்த் தாண்டனுங்
கொதித்துக்
கற்றை வெஞ்சுடர்ச்
சுரிகையை
மருங்குறை கழித்து
மற்ற வன்மணி
மார்பத்து வயிரவான்

கவசம்
இற்றி டும்படி
குற்றினன் யாவரும் 246
இரங்க.
310 கிளைத்திடு டுந்திறல்
வெய்யவன் குற்றலுங்
கேடு
விளைத்த சூர்மகன்
தன்னுடைச்
சுரிகையால் மீட்டும்
குளத்தில் மூழ்குறக்
குற்றினன்
அன்னதோர் குற்றிற்
களைத்து வீழ்ந்தனன்
கால்பொர மறிந்தகற்
பகம்போல். 247
311 தாழ்ந்த சோரியும்

அலக்கணும்
பெருகுறத் தடந்தேர்
வீழ்ந்த வன்றனை
விளிந்தனன்
இவனென விடுத்துத்
தாழ்ந்த தோர்பெருந்
தனுவினை எடுத்துழி
தன்னிற்
சூழ்ந்த தானையோ
டேற்றனன் சூரியன்
பகைஞன். 248

312 ஏற்று நேர்வரு
சூரன்மா மதலையை
எதிர்ந்து
போற்ற லார்புகழ்
வீரராக் கதன்எனும்

பொருநன்
காற்றினன் வந்தனன்
துணைவர்கள்
தொலைந்ததுங்
கண்டான்
சீற்றம் உள்ளுற
நிமிர்ந்தெழக
குனித்தனன் 249
சிலையை.

313 சிலைகு னித்தொரு
பத்துநூ றயிற்கணை
தெரிந்தே
ஒலியு டைக்கழற்
சூரன்மா மதலைமே
லுய்ப்ப
விலகி யத்தொகைப்
பகழியால் நம்பிதன்

வியன்தேர்
வலவ னைத்தலை
துணித்தனன் வாளிநூ
றதனால். 250

314 நூறு வாளியாற்
சூதன்மாண் டிடுதலும்
நொடிப்பில்
வேறொர் பாகனை
வீரராக் கதன்நிறீ
வெகுளா
ஆறு மாமுகன்
அடிநினைந் தாயிரங்
கணையால்
கூறு செய்தனன்
அவுணர்கோன்
குருமணி மகுடம். 251

315 உவமை நீங்கிய
ஐவகைத் தாயவேற்
றுருவின்
மவுலி இற்றிடத்
திருவின்றி மன்றநாண்
எய்தி
அவதி இல்லதோர்
பெருஞ்சினம்
மூண்டெழ அவுணன்
குவடி லாமணிக்
குன்றுபோல் 252
நின்றனன் குறுகி.
316 மணியி ழந்திடும்
அரவுபோல் கதிரிலா
வான்போல்
பணையி ழந்திடுங்
கற்பகப் பழுமரந்

தனைப்போல்
துணைம ருப்பினை
இழந்திடுந் தந்திபோல்
தொல்லை
அணியி ழந்திடு
மகளிர்போல்
அழகிலன் ஆனான். 253
317 இற்றொ ழிந்திடு
மகுடநீத் தேவலர்
அளித்த
கற்றை ஒண்சுடர்
மவுலியொன்
றினைமுடி கவித்து
வெற்றி வீரராக்
கதன்விடு சரமெலாம்
விலக்கி
மற்ற வன்சிலை

துணித்தனன் வாளியா
யிரத்தால். 254

318 ஆடல் வெஞ்சிலை
அறுத்தலும் வயமுடை
அரக்கன்
நாடி ஓர்தனு
எடுக்குமுன் நாகிளங்
கதிரை
வீட ருந்தளை
இட்டவன் விசிகமா
யிரத்தால்
பாடு செய்தனன்
அனையவன்
தனதுதோ₵ப் பரியை. 255

319 மாய்ந்து மாத்தொகை
படுதலும் வீரனோர்

மணித்தேர்
பாய்ந்த காலையில்
இரவிமாற் றலனவன்
பாணி
ஏந்து வில்லினை
ஆயிரம் பகழியால்
இறுப்ப
வேந்தன் மாமகன்
தன்மிசை
அயிலொன்று 256
விடுத்தான்.
விடுத்த வேலினை
நூகோல்
தொடுத்தவன் வீட்டத்
திடத்தின் மேற்படு
வீரராக் கதனது
தெரிந்து

தடத்த தேரினும்
இழிந்தறை கூவியே
தனிபோய்
எடுத்தெ றிந்தனன்
பானுபோ பன்தனி
இரதம். 257

321 எறியும் எல்லையில்
தகுவர்தங்
குரிசில்விண்
ணெழுந்து
வெறிகொள் பங்கயத்
தண்ணல்முன்
கொடுத்ததேர்
வேலைச்
செறுநன் ஆவியை
உண்கென
விடுத்தலுஞ் சென்று

விறல ரக்கன்மேற்
பட்டதங் கனையனும்
வீழ்ந்தான்.
258

322 தரையில் வீழ்ந்திடும்
வீரராக் கதன்நனி
தளர்ந்தான்
முருகன் ஆணையாற்
போந்தில தவனுயிர்
முன்னம்
இரவி யம்பகை
திகிரியின்
மறிந்துளான் எழுந்து
பொருதல்
வன்மையின் றாகியே
இடைந்துபின்
போனான்.
259

323 போன காலையில்
வேறொரு தேரிடைப்
புகுந்து
பானு மாற்றலன்
வணக்கியோ£¢
கார்முகம் பற்றி
ஊனும் ஆவியுங்
கவர்ந்திடு சரமழை
ஒச்சி
ஏனை வீரர்கள்
தம்மையும்
வெல்லுமா
றெதிர்ந்தான்.
324 வீர வந்தகன் வீரமா
மகேச்சுரன் வீர
திரன் வீரமா
மகேந்திரன் திதற்புரந்

தரனாம்
நேரி லா£¢இவர்
ஐவருஞ் சிலைகொடு
நேர்ந்து
சூரி யன்பகை
வன்மிசைக்
கணைமழை
சொரிந்தார். 261

325 சொரிந்து வேறுவே
றளவையி லாதபோர்த்
தொழிலைப்
புரிந்து பின்னுறச்
சூர்மகன்
சரங்கள்மெய் புதைய
வருந்தி நின்றனர்
இருவர்கள் மறிந்தனர்
ஒருவர்

இரிந்து தேர்சிலை
அழிந்துநொந் 262
தேகினர் இருவர்.
326 வேறு
சாற்றும் இத்திறம்
வீரர்கள் யாஆயுந்
தனிமைந்தன்
வீற்று வீற்றமர்
ஆடியே
வென்றிகொண்
டிடும்வேலை
ஆற்ற லின்றிமுன்
பின்றிய அவுணர்தா
னைகள்முற்றும்
நாற்றி சைக்கணும்
வந்துவந் தவனைநண்
ணியவன்றே. 263

327 பின்று சேனைகள்
யாவையுந் தன்னயற்
பெயர்த்தும்வந்
தொன்ற வேயிர
வியம்பகை வருதலும்
உதுகண்டான்
நன்று நன்றியவன்
ஆற்றலின் திறமென
நகைசெய்தான்
என்று நந்திதன்
கணத்தரில்
தலைமைபெற்
றிருக்கின்றான். 264
328 வாகை மொய்ம்புடை
மேலையோன்
மாலயன்
தனக்கெட்டா

ஏக நாயகன் திருமகன்
தாளிணை இனிதுன்னி
ஒகை யால்நனி
வழுத்தியே
போர்த்தொழில்
உளங்கொண்டு
சேகு நெஞ்சுடைப்
பானுகோ பன்முனரு
செலலுற்றான். 265

329 அரியும் நான்முகத்
தொருவனுங்
குனித்திட
அறத்தேவுஞ்
சுருதி மாமறைத்
தொகுதியுங்
குனித்திடச்

சுரர்கோவும்
இரவி அண்ணலும்
மதியமுங் குனித்திட
இகலாடல்
திருவும் மோடியுங்
குனித்திடக்
குனித்தனன் 266
சிலைதன்னை.
330 விசையெ டுத்திடும்
ஊதையும்
வடவையும்
வெருக்கொண்டு
வசையெ டுத்திட
அளக்கருந் தம்மொலி
வறிதாகத்
திசையெ டுத்திடும்
அண்டமும்

புவனமுஞ்
சிதைந்தேமா
றிசையெ டுத்திட
எடுத்தனன்
சிலையின்நாண்
இசைதன்னை. 267
331 நாணொ லிக்கொடு
வெஞ்சமர் புரியமேல்
நடப்பானைக்
காண லுற்றனன்
தினகரற் சினவிய
கதக்கண்ணான்
ஏனு டைப்பெருங்
கார்முகம் ஒன்றுவே
றெடுத்திட்டான்
சேணி லத்தவர்
பனித்திடக்

குனித்தொலி
செய்திட்டான். 268

332 முன்பு திண்டிறல்
வாகுவின் வாகுவின்
முழக்கத்தை
அன்பின் நாடிய
அமரர்கள் அளவைதீர்
மகிழ்வெய்திப்
பின்பு சூ£¢மகன்
சிலையொலி
கேட்டலும் பேதுற்றே
இன்ப துன்பங்கள்
ஒருவழிக் கண்டனம்
இவனென்றார். 269

333 புகழ்ச்சி மேலவன்
குணத்தொலி

செவிக்கொடு
பொலிந்தோர்கள்
இகழ்ச்சி மிக்கவன்
குணத்திசை
கேட்டலும்
இரங்குற்றார்
திகழ்ச்சி ஆரமு
துண்டவர் நஞ்சமுண்
செயல்போன்றார்
மகிழச்சி ஈற்றினில்
துன்புவந்
தடைவதோர்
வழக்கன்றோ. 270
334 மாயன நான்முகன்
மகபதி முதலிய
வானோர்கள்
காயம் யாவினும்

நிரந்தனர்
அமர்த்தொழில்
காண்பாராய்
ஆய போழ்தினிற்
சூரபன் மாவருள்
அசுரேசன்
தூய வன்தனை
நோக்கியே இனையன
சொல்கின்றான். 271

335 கோதை வேலினால்
தாரகன் தனையடு
குகன் அல்லை
ஆதி ஏனமாய்ப்
புவியினைக்
கிளைத்திடும்
அரியல்லை
வேத நான்முகத்

தவன்அல்லை
விண்ணுளோர்
வேந்தல்லை
தூத னாகிய
நீகொல்என்
னெதிர்பொருந்
தொழில்வல்லாய். 272

336 இழைத்த மாயையால்
முற்பகற் போந்தனை
எங்கோன்முன்
பழித்தி றஞ்சில
கூறினை இளவலைப்
படுத்திட்டாய்
அழித்தி மாநகர் யான·
துணர்ந்திலன்
அதனாலே
பிழைத்தி

அன்றெனின்
உய்ந்திவண் வந்திடப்
பெறுவாயோ. 273
337 பொருது
வென்றிகொண்
டுனதுயிர் நடுவனூர்
புகுவிப்பன்
சரதம் இங்கிது
பிறந்திடும்
அளவையில்
தழல்காலும்
பரிதி யைச்சிறை
பிணித்தவன்
ஒற்றனைப்
படுத்தானென்
றொருத னிப்பழி
கொள்வதல் லாற்புகழ்

உறுவேனோ. 274

338 முனைமு டித்தநின்
துணைவரை
வென்றன் முரட்பூதந்
தனைய டர்த்தனன்
சிந்தினன் அனிகமுந்
தனிநோ¢ந்த
உனைமு டிக்குவன்
உனைவிடுத்
தோனையும்
உலைவித்தென்
சினமு டிக்குவன்
மகபதி தன்னையுஞ்
சிறைசெய்வேன். 275

339 என்ற காலையில்
வீரவா கியம்புவான்
எவரேனுஞ்

சென்று போர்புரி
வார்தமை வெல்வதே
திறலாகும்
பின்று வார்தமை
அடுவதே
வசையலால்
பிறிதுண்டோ
வென்றி எய்துவார்
உரைப்பரோ போர்புரி 276
விரைந்தென்றான்.
340 வேறு
என்னு மாத்திரத்
திரவியம் பகைஞன்ஈ
ரைந்து
பொன்னெ டுங்கணை
எடுத்துவார்
சிலையிடைப் பூட்டி

மின்னு வாமென
விடுத்தலும் வீரனும்
விரைவில்
அன்ன ஈரைந்து
வாளிதொட்
டவற்றினை 277
அறுத்தான்.
341 ஆறு நாலுவெம்
பகழியும் அறுத்தபின்
அறிஞன்
நூறு வாளிகள்
விடுத்தலும் வந்தது
நோக்கி
வீறும் அத்தொகைச்
சரங்கள்விட்
டவையிடை வீட்டி
ஈறி லான்மகன் மீதிலா

யிரங்கணை எய்தான். 278
342 ஆயி ரங்கணை
தூண்டிமற் றவற்றினை
அறுத்துத்
தூய வன்பதி
னாயிரஞ் சுடுசரந்
துரப்பத்
தீயன் அத்தொகை
வாளியால அங்கவை
சிந்தி
ஏயெ னக்கொடும்
பகழிநூ றாயிரம்
எய்தான்.
279
343 உய்த்த வாளிநூ
றாயிரந் தன்னையும்
உரவோன்

அத்தொ கைப்படு
பல்லவந் தூண்டியே
அறுத்துப்
பத்து நூற்றின்மேல்
ஆயிரம் பெற்றிடும்
பகழி
மெய்த்த ழற்கதிர்
இரவியம்
பகைஞன்மேல் 280
விடுத்தன்.
344 விடுத்த வாளியைப்
பத்துநூ றாயிரம்
விசிகந்
தொடுத்து மாற்றியே
சூரபன் மாவருள்
தோன்றல்
எடுத்து நூறுநூ

றாயிரம் புங்கவம் ஏவ
நொடிப்பில் வீட்டினன்
அனையன சிலீமுகம் 281
நூக்கி.

345 வஞ்ச னேவினை
மாற்றியே எம்பிரான்
மதலை
செஞ்ச வாளிநூ றாயிர
கோடிகள் செலுத்தக்
கஞ்ச மாமகள்
உயிர்த்திடு திருமகன்
கணிப்பில்
புஞ்ச வார்கணை
இறுதிநாள்
முகிலெனப்
பொழிந்தான். 282

346 பா£¢ம றைந்தன

திசையெலாம்
மறைந்தன படர்முந்
நீர்ம றைந்தன குலகிரி
மறைந்தன நிலவுங்
கார்ம றைந்தன
ககனமும் மறைந்தன
கதிரோன்
தேர்ம றைந்தன
இருவர்தங்
கணைமழை செறிய. 283

347 பாரி வட்டமும் மாதிர
வட்டமும பரவை
வாரி வட்டமும்
நேமியின் வட்டமும்
மலிவான்
மூரி வட்டமும்
அண்டத்தின்

வட்டமும் முடுகிச்
சாரி வட்டமாய்த்
திரிவன அனையவர்
தடந்தேர். 284
348 மாறில் வாளிகள்
முறைமுறை
சொரிதலான் மறைவர்
ஈறு செய்தவை
அகற்றுழித்
தோன்றுவர்
இமைப்பில்
வேறு வேறதாய்
இத்திறம் நிகழ்த்திடும்
வீரர்
சூறை போலமர்
ஆடினர் உலகெலாஞ்
சுற்றி.

285

349 இரவி வானவன்
தனதுதிண் தேரினும்
ஈ£¢க்கும்
புரவி மீதினும் உடுபதி
மானத்தும் புறஞ்சூழ்
கரிகள் மீதினும்
விண்ணுலா அமரர்தங்
கண்ணும்
பொருவி லாளியர்
விடுகணை சிதறியே
போமால். 286

350 செங்கண் வீரர்கள்
இருவரும்
பொருவதித்
திசையென்
றங்கு நாடரி

தவர்விடும் பகழிகள்
அனந்தம்
மங்குல் வானெலாம்
நிரந்தன மிசையினும்
வருமால்
இஙகு நிற்கரி
தெமக்கென ஓடினர்
இமையோ£¢. 287
351 புடவி கீழ்வன
அண்டங்கள்
துளைப்பன புறத்திற்
கடலொ ரேழையும்
பருகுவ புவனங்கள்
கடப்ப
அடலின் மேதக்க
யாவருந் தடுத்திடற்
கரிய

வடவை நாவையுந்
துணிப்பன
அவர்விடும் வாளி. 288
352 இகல்க டந்திடு
திண்டிறல் வாகுவும்
இரவிப்
பகையும் ஆற்றிய
பெருஞ்சமர்
வலியையார் பகர்வார்
மிகுதி கொண்டபல்
கணைமழை
உலப்புறா விடுப்பத்
திகிரி யம்படை
போன்றன
அனையர்கைச்
சிலைகள். 289
353 வெய்ய வன்றனைத்

தளையிடும்
வெய்யவன் விறலார்
துய்ய மொய்ம்பினான்
விடுசர மாரியைத்
தொலைத்துக்
கையி ருந்திடு
கார்முகம் ஒன்றையுங்
கடிதின்
ஐயி ரண்டுநூ
றயிற்கணை
யால்அறுத்
தா£¢த்தான். 290
354 ஆ£¢த்த காலையில்
வீரவா குப்பெயர்
அறிஞன்
பேர்த்தும் ஓர்தனு
வாங்கியே

பெருஞ்சினம்
பிடித்துச்
சூ£¢த்த வெங்கணை
ஆயிரம் விரைவினில்
தூண்டி
மூர்த்த மொன்றினில்
அவுணன்ஏந் 291
தியசிலை முரித்தான்.
355 முரித்த காலையின்
அவுணர்கோன்
ஆற்றவும் முனிந்து
கரத்தின் மற்றொரு
சிலைகுனித் தாயிரங்
கணைகள்
உரத்தின் நம்பியும்
அணங்குற
விடுத்தலும் ஒரேழ்

சரத்தி னாலவன்
தனிப்பெரு
மவுலியைச்
சாய்த்தான். 292

356 வாய்த்த பன்மணி
குயிற்றிய கனகமா
மவுலி
சாய்த்த காலையின்
வேறொரு கதிர்முடி
தன்னை
ஏத்தல் சான்றிடு
சூர்மகன் புனையுமா
றெடுத்தான்
பூத்த செங்கதி
ரவனைமுன்
பிடித்தவா போல. 293

357 எடுத்த பொன்முடி

சென்னியிற்
கவித்தனன் இதன்முன்
வடித்த வெங்கணை
ஆயிரந் தூண்டிமற்
றவன்மேல்
அடித்த சாலிகை
சிந்தினன் சிந்திய
அளவில்
நடித்து நல்லறம்
பாடின பரிதியும்
நகைத்தான். 294

3589 நிருதர் போற்றிடு
சூர்மகன் ஆயிர
நெடுங்கோல்
சுருதி நாயகன்
இளவல்தன்
நுதலிடைத் துரப்பக்

குருதிநீ ருண்டு
குழுவொடுந்
தோன்றுவ குணபால்
பரிதி வானவன்
இளங்கதிர்
விரிந்தெழும் பரிசின்.
295

359 நெற்றி மீதுகோல்
ஆயிரம் படுதலும்
நிறையில்
சற்று நீங்கிலன்
தன்வலி சுருங்கிலன்
தக்கோன்
பற்றிஅங் கையால்
பறித்தவை வீசினன்
பகைஞன்
கொற்ற வெய்யகோல்

விளிவின்றி நின்றிடுங் 296
கொல்லோ.

360 சகத்தை நல்கிய
அறுமுகற் கிளவல்அத்
தகுவன்
முகத்தின் ஆயிரம்
அகலத்தின் ஆயிரம்
மொய்ம்பின்
அகத்தின் ஆயிரங்
கரங்களின் ஆயிர
மாக
மிகைத்த வெங்கணை
தெரிந்தொரு
தொடையினில்
விடுத்தான் 297

361 விட்ட வாளிகள்
சூர்மகன் அவயவம்

விரவிப்
பட்டு ழூழ்கலும்
அவசமாய்த்
தளர்ந்தனன் பாணி
நெட்டி ருஞ்சிலை
ஊற்றமாய்
வறியனாய் நின்றான்
தொட்ட தெண்கயத்
தூறிமேல் எழுந்தது
சோரி. 298

362 வந்து வந்தெழு
குருதிநீர் முழுதுடன்
மறைப்பப்
புந்தி தன்னிடைச்
சீற்றமும் மூண்டெழப்
பொலிவான்
செந்த ழற்பிழம்

பாலுயா¢ குன்றெனத்
திகழ்ந்தான்
அந்தி மேற்றிசை
எழிலியின் வண்ணமு
மானான். 299

363 ஆன போழ்தினில
அவுணமாத்
தலைவர்கள் யாரும்
பானு மாற்றலன்
பொருவலி
இன்மையைப் பாராச்
சேனை நாற்பெரும்
பரவையி னோடுமுன்
சென்று
மான வேற்படை
வீரவா குவின்புடை
வளைத்தார். 300

364 இலைபி றங்கிய
சூலம்விட் டேறுதண்
டெழுவம்
உலைபி றங்கிய
கணிச்சிநே மிப்படை
ஓங்கும்
சிலைபி றங்கிய
பகழிகள் வீரன்மேற்
செலுத்தி
மலைபி றங்கிய
இரவிசூழ் திமிரென 301
மறைத்தார்.
365 வேறு
தொடைக்கலன் நிலவு
மார்பில் தொல்அசு
ரேசர் கொண்ட
படைக்கல மான

வெல்லாம் விடுத்தலுந்
தனது பாணி
இடைக்கலந் திருந்த
வார்விற் குனித்தனன்
இடுக்கட் பட்டோர்
அடைக்கலம் புகுதும்
வெள்¢ளி அருவரை 302
அளித்த அண்ணல்.
366 ஆயிர கோடி கோடி
அடுசரந்
தொடையொன் றாக
மாயிரும் புயத்து
வள்ளல் வல்லையின்
வலிது தூண்டித்
தீயவர் உடன்று விட்ட
படையெலாஞ் சிந்த
லுற்றான்

பாயிருட் படலங்
கீறுஞ் செங்கதிர்ப் 303
பரிதி யேபோல்.

367 அவுணர்கள்
யாருமுய்த்த
அடுபடை மாரி சிந்திக்
குவவுறு விசயத்
தோளான்
கொடுஞ்சரம் அனந்த
கோடி
தவறில வாக உய்த்துத்
தகுவர்தந் தானை
முற்றும்
உவரியுண் வடவை
போல ஒல்லையின்
முடிக்க லுற்றான். 304

368 தோலினை அறுக்கும்
வாளைத் துணித்திடுஞ்
சோதி வில்லின்
காலினை அறுக்கும்
வெய்ய கணிச்சியை
அறுக்கும் வீசுங்
கோலினை அறுக்கும்
நேமிக் கொடும்படை
அறுக்குங் காமர்
வேலினை அறுக்கும்
அம்மா விடலைதன்
வீர வாளி.

369 வேறு
உரந்துணிக்குங்
கவசமிடும்
உரந்துணிக்கும்

புயந்துணிக்கும் ஒன்ன
லார்தங்,
கரந்துணிக்கும்
அடல்புரிமோ
கரந்துணிக்குங் கழல்
துணிக்குங் கணிச்சி
கைத்தோ,
மரந்துணிக்குங்
குனித்தகொடு
மரந்துணிக்கும்
வாய்துணிக்கும்
மவுலி தாங்குஞ்,
சிரந்துணிக்கும்
எறிந்திடும்வச்
சிரந்துணிக்கும்
உரவோன்றன்
செங்கை வாளி.

370 கதமறுக்கும்
வதமறுக்குந்
தூங்குபுழைக்
கையறுக்குங்
கபோலத் தூறும்,
மதமறுக்கும்
நுதலறுக்கும்
வாயறுக்குஞ்
செவியறுக்கும் வயிரக்
கோட்டின்,
விதமறுக்கும்
வாலறுக்கும்
மேய்யறுக்குந்
தலையறுக்கும்
வேழஞ் செல்லும்,
பரமறுக்கும்
முரணறுக்கும்

அரண்அறுக்கும் 3071
வீரன்விடு பகழி மாரி.
371 ஆரறுக்குஞ்
சகடறுக்கும்
அச்சறுக்கும்
நெடுந்துவசம்
அறுக்குந்தேரின்,
பாரறுக்குங்
கூம்பறுக்கும்
பாகறுக்கும்
அங்கணுறும் பதகர்
ஆவி,
வேரறுக்கும்
ஆடியறுக்கும்
விரிதருகொய்
யுளையறுக்கும்
விளங்குஞ்

செம்பொன்,
தாரறுக்கும்
புரவிகளின்
தலையறுக்கும்
நிலையறுக்குஞ்
சரங்கள் மன்னோ. 308
372 கானோடும்
வரையோடுங்
கரையோடுந்
திரையோடுங்
கழியினோடும்,
மீனோடுங்
கடலோடும்
விசையோடுந்
திசையோடும்
மேகமோடும்,
வானோடும்

நிலனோடும்
இருகதிரின்
மருங்கோடும்
வாளத்தோடும்,
தேனோடும்
பூந்தாரான்
சிலையோடும்
நெடுமபகழி
சிந்துஞ்சென்னி. 309
373 வேறு
பாயிரும் புனல்போல்
ஓடிப் படியெனப்
பரந்து நீடித்
தேயுவின் திறல்மேல்
கொண்டு சேணென
முடிவின் றாகி
வாயுவின் விரைந்து

சென்று வள்ளல்கை
வாளி ஒவ்வொன்
றாயிர கோடி சென்னி
அறுக்கினும் வெறுக்கி
லாவே. 310

374 வரந்தனில் தமைமை
சான்ற ஒருசில மான
வீரர்
சிரந்தனைத் துணித்துக்
கொண்டு சீர்கெழு
சூரன் வைகும்
புரந்தனிற்
கொடுபோய்
அன்னார் பொற்றொடி
மடந்தை மார்தங்
கரந்தனின் உகுத்துச்
செல்லுங் கந்தனுக்

கிளவல் வாளி. 311

375 புரண்டன வயவர்
யாக்கை பொழிந்தன
குருதித் தாரை
உருண்டன மான்தேர்
ஆழி உலவின
வலவுங் கூளி
திரண்டன குணங்கர்
ஈட்டஞ் செறித்ன
சேனம் பிள்ளை
இருண்டன திசைகள்
முற்றும் இரிந்தன
ஒழிந்த தானை. 312

376 பட்டன புரவிப் பந்தி
படிந்தன முடிந்த
வேழங்
கெட்டனர் அவுணர்

யாருங் கிடந்தன
ஒடிந்த திண்டேர்
அட்டனன் ஒருவன்
நின்றான் அகலிரு
விசும்பை வலலே
தொட்டன பிணத்தின்
பொம்மல் சோரியா
றொழுகிற் றன்றே. 313
377 பாய்ந்திடு குருதி
நீத்தம் படர்ந்தது
புகுந்து பௌவஞ்
சேர்ந்தது சுறவு
மாந்திச் செருக்கிய
திறலோன் அம்பால்
வீந்திடும் ஆவி
விடுத்தனர் சென்று
தந்தாள்

ஒய்ந்தனர் நடுவன்
தூதர் ஒழிந்தன கழிந்த
பூசல். 314

378 சிந்திய அவுணர்
தானைச் செய்தியும்
பரிதிக் கூற்றன்
நொந்தனன் தமியன்
நின்ற தன்மையும்
நோக்கி நோக்கி
நந்தம தண்ணல்
தன்பால் நண்ணுதும்
என்னா மீண்டு
வந்தன முந்து சாய்ந்த
வயப்பெரும் பூத
வெள¢ளம். 315

379 இரிந்திடு பூத வீர
ரியாவரும் மீண்டார்

நின்று
வருந்திய தலைவர்
தொல்லை வன்மிடல்
பெற்றார் அங்கண்
அருந்துயர் உழந்து
வீழ்ந்தார் ஆவியோ
டெழுந்தார் இன்னோர்
பொருந்தனி வீர
வாகுப் புடையுற
வளைந்து புக்கார். 316
அங்கது போழ்து
தன்னின் அயர்வுயிர்த்
துணர்வு தோன்றச்
செங்கதி ரோனைச்
சீறுஞ் சேவகன் சுற்று
நோக்கிச்
சங்கையின் நிமிர்ந்த

கொள்கைத்
தன்பெருஞ் சேனை
காணான்
கங்கமுங் கழுகும்
ஆர்க்குங் களேபரச்
சூழல் கண்டான். 317

381 நேருறு தனிவில் லாளி
நின்றது நோக்கி
நம்பால்
சாருறும் அனிக
மெல்லாந் தடிந்தனன்
இவனென் றுன்னி
ஆரிடை யடஙகிற்
றம்மா ஆண்மைக்கும்
அவதி யுண்டோ
வீரன்மற் றிவனே
அல்லால் வேறிலை

போலு மென்றான். 318
382 இனையன வியந்து
பின்னும் என்னெதிர்
பொருத வீரர்
அனைவரும்
விளிந்தோர் அன்றி
அடல்வலி
படைத்தோர் இல்லை
குனிசிலை ஒருவன்
நின்றான் கொற்றமுற்
றிடுவன் அம்மா
தினகரன் பகைஞன்
ஆற்றல் சீரிது சீரி
தென்றான். 319
383 கன்னலொன் றளவை
தன்னில் கந்தவேள்
ஒற்றன் யாக்கை

சின்னபின்
னங்களாகச்
செய்குவன் செய்தி
டேனேல்
பின்னுயிர் வாழ்க்கை
வேண்டேன்
யான்பிறந்
தேனுமல்லேன்
என்னொரு சிலையும்
யானும் எரியிடைப்
புகுவ னென்றான். 320
384 வஞ்சினம் இனைய
கூறி மாதிரக் கிழவன்
மைந்தன்
நெஞ்சினில் வெகுளித்
தீயும் மானமும் நீடி
ஓங்க

எஞ்சலில் ஈசன்
முன்னம் ஏகிய
கொடுநரு சென்னச்
செஞ்சிலை வீரன்
முன்னந் தேரொடுஞ்
சென்று சேர்ந்தான். 321
கைத்தலத் திருந்த
தொல்லைக் கார்முகம்
வளைய வாங்கி
முத்தலைப் பகழி
அங்கோ ராயிரம்
விடுப்ப மொய்ம்பன்
அத்திறத் தியன்ற
வாளி ஆயிரஞ்
சிலையிற் பூட்டி
உய்த்தனன் அறுத்துப்
பின்னு மொராயிரஞ்

சரங்கள் விட்டான். 322

386 அற்றது தெரிந்து
தீயோன் ஆயிரம்
விசிகந் தூண்டி
மற்றவை விலக்கிப்
பின்னும் வாளியோர்
அயுதந் தொட்டுக்
கொற்றவன் தேரும்
பாகுங் குரகதக் குழுவு
மாயச்
செற்றனன் அதனை
நோக்கிச் சேணுளார்
அலக்கண் உற்றார்.
323

387 வில்லொடும் வீர
வாகு வேறொரு
தோ₵மேற் பாய்ந்து

வல்லிதின் நூற்று நூறு
வாளிகள் துரந்து
வெய்யோன்
சில்லியந் தேரும்
மாவும் வலவனுஞ்
சிலையும் வீழப்
பல்லிருந் துண்டஞ்
செய்தான் விண்ணவர்
பண்ணை ஆர்ப்ப. 324
388 பூங்கழல் மிழற்ற
வேறோர்
பொன்னவாந் தேரின்
மீப்போய்
ஆங்கொரு சாபம்
பற்றி அவுணன்றன்
செவியின் காறும்
வாங்கினன் ஏழு நூறு

வச்சிரப் பகழி பூட்டி
ஓங்கலம் புயத்து
வீரன் உரத்திடைப் 325
புகவுய்த் தார்த்தான்.
389 ஆகத்திற் பகழி பாய
அறுமுகன் தூதன்
முன்னஞ்
சோகத்தை உணர்கி
லாதோன் துயரத்தின்
சுவையுங் கண்டு
மாகத்தில் இரவி
தன்னை வன்சிறை
பிணித்தோன் சென்னி
காகத்துக் கிடுவன்
என்னா
வெகுண்டனன் காலன்
போல்வான். 326

390 கறுத்திடு வீரன் சூரேழ்
கங்கபத் திரங்கள் ஏவி
அறுத்தனன்
சிலையைப் பின்னும்
ஆயிரம் பகழி தூண்டி
நொறிற்பரி இரதந்
தன்னை நூறினன் நூறு
கோலான்
மறுத்தெதிர் பொருத
தீயோன் மருமத்தை
வாயில் செய்தான். 327

391 வருந்திலன் அதற்கு
மைந்தன் வயினுறும்
இரத மொன்றின்
விரைந்துடன் புகலும்
வீரன் விசிகமா
யிரத்தைத் தூண்டி

உரந்திறந் திட்ட
வாற்றால் ஓச்சியே
புறத்தில் தூங்கும்
அரந்திகழ் பகழத்
தூணி துணிபட
அறுத்தான் அன்றே. 328
392 தூவுறு பகழி தூர்க்குந்
தூணியிற் றிடலும்
நேமிக்
காவலன் தனயன்
அம்மா கார்முகம்
விஞ்சை தன்னால்
மேலவன் வென்றி
கோடல் அரிதெனா
வினைய முன்னித்
தேவர்தே வுதவு
மோகப் படையினைச்

செங்கை கொண்டான். 329

393 சிந்தனை கவரும்
மோகத் தீப்படை
அவுணன் செங்கை
வந்திட அனைய
போழ்தின்
மனத்தினால் வழிபா
டாற்றி
வெந்திறல் அனிகத்
தோடு மேவலன்
தன்னை எய்திப்
புந்தியை அழித்து
வீட்டி வருகெனப்
புகன்று விட்டான். 330

394 விட்டிடு மோக
மென்னும்

வியன்படை வெகுளி
வீங்கித்
தட்டுடை நெடுந்தேர்
வெய்யோன்
தன்பெருஞ் சுடர்கள்
மாற்றி
நெட்டிருட் படலை
வீசி நிரந்தபல்
லுயிரும் அஞ்சி
உட்டௌ¤ வகன்று
மாழ்க ஒல்லெனப் 331
பெயர்ந்த தன்றே.
பெயர்ந்திடு மோக
நாமப் பெரும்படை
ஊக்க நோகதித்
துயர்ந்தனர் வெருவி
ஆற்றத் துளங்கினர்

துணுக்கென் றுள்ளம்
அயர்ந்தனர் பூதர்
யாரும் மவ்வவர்
தலைவ ராேனார்
சயந்தனை இழந்து
நின்று சாம்பினர்
தேம்பு கின்றார். 332

396 வேறு
மோகப் படைசே
றலுமுந் தெதிர்மா
றேகப் படையொன்
றையுமே வுகிலார்
சேகப் படையத்
தொடைசிந் தினரால்
மாகப் படைமொய்ம்
புடைவள்
ளல்பினோர்.

333

397 அந்தத் திறல்வெம்
படையாற் றலுடன்
வந்துற் றுழிமே
லவன்மற் றிதுதான்
எந்தப் படையால்
அழிவெய் துமெனாச்
சிந்தித் தனன்வே
றொருசெய் 334
கையிலான்.

398 ஒன்றா முதலோன்
இவையுன் னுதலும்
அன்றா லம்வருந்
திறனா மெனவே
சென்றார் உணர்வுஞ்
சிதைவித் தபோர்
வென்றார் புகழ்மோ

கவியன் படையே. 335
399 இலக்கத் துடன்எண்
மரும்ஏ னையரும்
அலக்கத் துடன்வீழ்ந்
தனர்மாற் றலரூர்
கலக்குற் றிடுகா
ளைகருத் தழியா
நிலக்கட் படுகந்
தெனநின் றனனால். 336
400 நிற்கும் பொழுதத்
தினின்நீ டகல்வா
னற்கும் பரிதிப்
பகையங் கதுகண்
டெற்கின் றெதிரா
யினர்யா வருளார்
நற்குன் னின்என்
றுநகைத் தனனே. 337

401 புகழுற் றிடுமே
லவர்புந் தியின்மா
றிகழுற் றிடுபெற்
றிதெரிந் தவுணன்
மகிழுற் றுநகைத்
துவயம் புனையா
நிகழுற் றிடுசீ
ரொடுநின் றனனே. 338

402

மல்வன்
மைகொள்மொய்ம்
பனுமற் றவருந்
தொல்வன் மையிலா
துடல்சோர்ந் தனரால்
வில்வன் மையினால்
இவர்வீ டுறவே

கொல்வன் கடிதென் 339
றுகுறித் தனனே.
403 வரிகின் றவில்வாங்
கினன்வா லுணர்வு
திரிகின் றவன்மேற்
சிலைவீ ரர்கள்மேல்
விரிகின் றகணப்
படைமேல் விசிகளு
சொரிகின் றனன்யாக்
கைதுளைத் தனனே. 340
404 ஆங்கா கியவே
லையில்ஆ றுமுகன்
பாங்காம் விறலோ
னொடுபா ரிடர்கள்
நீங்கா மருள்மால்
கொடுநே ரலனால்
தீங்கா யினதன்

மைதெரிந் தனனே. 341

405 தெரிந்தான் முகமா
றொடுசேர்ந் துயிர்தோ
றிருந்தார் அருள்செய்
திடுமெம் பெருமான்
விரைந்தாங்
கொர்அமோ கவியன்
படையைப்
புரிந்தான் அதனோ
டுபுகன் றிடுவான்.
342

406 நன்றே தெள¤வுற்
றெமர்நண் ணும்வகை
நின்றே திலன்விட்
டநெடும் படைபாற்
சென்றே அதன்வன்
மைசிதைத் திவண்நீ

வென்றே வருகென்
றுவிடுத் தனனே. 343
407 ஏண்கொண் டசிவன்
மகனே வுபடை
சேண்கொண்
டுபடா¢ந் திருள்சிந்
தையராய்த்
தூண்கொண் டிடுதோ
ளவர்துன் னியதோர்
மாண்கொண் டசெருக்
களம்வந் ததுவே. 344
408 மிடல்கொண் டவமோ
கவியன் படைசென்
றிடுகின் றுழிவெய்
யவனே வுபடை
அடல்கொண் டிடும்வீ
ராகத் தில்இருள்

உடையும் படிவல்
லையினோ டியதால். 345
409 அசைகொண் டவுடுத்
திரளா னவெலாம்
மிசைகொண் டவினன்
வரவே கியபோல்
திசைகொண் டிடுநம்
மவர்சே னையொரீஇ
விசைகொண்
டவுணன் படைமீண்
டதுவே. 346
410 மோகத் தனிவெம்
படைமொய்ம்
பிலதாய்
ஏகத் திறல்வா குவும்ஏ
னையரும்
ஆகத் தினின்மை

யல்அகன் றமலன்
வாகைப் படைகண்
டுமகிழ்ந் தனரே. 347

411 அழலுற் றதுபோ
லஅகல் மணியின்
நிழலுற் றிடுதேர்
மிசைநின் றவனும்
எழலுற் றிடுவீ
ரர்கள்யா வர்களுந்
தொழலுற் றனர்நின்
றுதுதித் தனரே.
348

412 செயிர்கொண் டகருத்
தொடுசெற் றலர்தம்
உயிர்கொண்
டிடுவோன் படையூற்
றமெலாம்

அயிர்கொண் டிடஅட்
டதன்ஆற் றல்தெரீஇ
மயிர்கொண்
டபொடிப்
பொடுவாழ்த் 349
தினரால்.
413 தீயோன் படைசெய்
தசெயற் கையில்யாம்
மாயோ மருளென்
கையகத் தடையா
வாயோ டுரைவீ
ரமறுத் தனராய்
ஏயோ வெனவெள¢
கினர்யா வருமே. 3501
414 அண்டா தவனால்
எம்மகத் திலிருள்
உண்டா கியதன்

மையுணர்ந் தறிவன்
விண்டா னுறஇப்
படைவிட் டனனென்
றெண்டா வுமுளத்
திடையெண்
ணினரால். 351

415 முந்நாள்
கெனுமொய்ம்
புளமூர்த் திதனை
உன்னா அருள்நீர்
மையுளத் தடையா
அன்னார் தொழுதேத்
தினர்அத் துணையின்
மின்னா மெனஅப்
படைமீண் டதுவே. 352

416 மீண்டுற் றவமோ
கவியன் படைபோய்த்

துண்டுற் றகுகன்
புடைதுன் னியதால்
ஆண்டுற் றிடும்வீ
ரர்கள்அண்
டலன்மேல்
மூண்டுற் றிடுபூ
சல்முயன் றனரே. 353

417 ஆங்குற் றிடுகா
லையடுந் திறலின்
பாங்குற் றிடுமொய்ம்
புபடைத் துடையோன்
நீங்கற் கருமா
னமும்நீள் சினமும்
ஓங்குற் றெழவின்
னதையுன் னினனே. 354

418 அந்நே ரலன்ஈண்
டொரடற் படையான்

முன்னே மயல்செய்
தமுரண் தொலைய
இன்னே அடுவேன்
எனஎண் ணமுறாக்
கொன்னே அரன்மாப்
படைகொண் டனனே. 355

419 அங்கத் துணைகண்
டனன்அவ் வசுரன்
எங்கட் கிறைவன்
படைஏ கியதும்
வெங்கட் படுதன்
படைமீண் டதுவுஞ்
செங்கட் டிறல்அண்
ணல்செயற் கையுமே.
356

420 வேறு
இம்மெனச் சூர்மகன்

இவற்றை நோக்குறா
விம்மிதம் எய்தினன்
வீர மொய்ம்புடைச்
செம்மலை
எதிர்ந்திலன் செருக்கு
நீத்தனன்
கைம்மிகு துயரினன் 357
கருதல் மேயினான்.
421 இவ்விடை ஒன்னலர்
எண்ணம் யாவையும்
வவ்வினன் மாநில
வரைப்பின் வீட்டினன்
உய்வகை பெற்றுடன்
உணர்ந்து
தோன்றினார்
செய்வதென் ஐயகோ
கடவுள் செய்கையே. 358

422 எடுத்தனன் மாற்றலன்
இறைவன் மாப்படை
தொடுத்திடு
வான்எனில் துன்னி
என்னுயிர்
படுத்திடும் யானது
பரித்து வந்திலன்
விடுத்துடன் அப்படை
விலக்கும் வண்ணமே. 359

423 வென்றிடல் அரிதினி
வீர வாகுவைச்
சென்றனன் முதுநகர்த்
தெய்வ தப்படை
மன்றவுந் தந்திவன்
வன்மை மாற்றுவன்
நின்றிடல் பழுதென
நெஞ்சில்

உன்னினான். 360
424 அயன்மகன்
மதலைசேய் அருவ
மாகியே
வியன்மிகு தனதுதேர்
விடுத்து
விண்ணெழீஇப்
பயனறு முகிலெனப்
படர்ந்து வல்லையின்
நயனுறு கடிமதில்
நகருட் போயினான். 361
425 கொற்றவன்
மறைந்தகல் கொள்கை
காண்டலுஞ்
சுற்றுறு தானவர்
தொலைந்து
போயினா£¢

அற்றது தெரிந்திடும்
அமரர் யாவரும்
வெற்றிஇன்
றெமதென விளம்பி
ஆர்த்தனர். 362
426 மாயையின்
அருவமாய் வஞ்சன்
மாநகர்
போயினன் காலையே
புகுவன் போர்க்கினி
ஆயவன்
தனைவிரைந் தடுதி
என்றுபூத்
தூயினர் வீரன்மேற்
சுரர்கள் யாவரும். 363
427 தினகரன் மாற்றலன்
செம்பொற் றேரொரீஇ

இனைவுடன்
அருவமாய் இரிந்து
போதலை
வினையமொ
டோ£¢வுறா வீரன்
நின்றனன்
முனிவொடு பிழைபடு 364
மூரி யானைபோல்.
428 விண்டிடு சூர்மகன்
வெருவி வெந்நிடல்
கண்டனர்
துணைவருங்
கணத்தின் வீரருந்
திண்டிறல் இழந்தனன்
தீயன் பற்றிநாங்
கொண்டணை
வாமெனக் கூறல்

மேயினார். 365

429 என்பது விளம்பியே
யாரும் ஆர்ப்பொடு
துன்புறும்
அவுணனைத்
தொடா¢ந்து
பற்றுவான்
முன்பொடு முயறலுந்
தெரிந்த
மொய்ம்பினான்
தன்புடை யோர்க்கிது
சாற்றல் மேயினான். 366

430 பேடியர் சிறுதொழில்
பேணி உள்வெரீஇ
ஓடினன் போகிய
ஒன்ன லான்றனை

நாடிநாம் அடுவது
நலத்தின் பாலதோ
சாடுவன் இனிவரிற் 367
சரதம் யானென்றான்.

431 என்றிவை வள்ளலும்
இயம்ப யாவரும்
நன்றெென இசைத்தலும்
அவற்றை நாடியே
குன்றுறழ் புயத்துணை
கொட்டிக் குப்புறீஇ
வென்றிகொள் பாரிட
வெள¢ளம்
ஆர்த்தவே. 368

432 முற்றிய தமர்இனி
முயல்வ தில்லையால்
செற்றலன் ஓடினன்
திரும்பும் வீரனும்

நிற்றிலன் இனியென
நினைந்து நீங்குவான்
உற்றன னாமென
இரவி யோடினான். 369

433 செந்திரு மதுமலர்
செறியப் பூத்துழ
முந்துறு நித்திலம்
முழுது மொய்த்தென
அந்தர முழுவதும்
அடைந்த செக்கரில்
சுந்தர உடுநிரை பலந்
தோன்றிய. 370

434 குண்டுநீர்க் கனலொடு
குலாவி மாதுளத்
தெண்டகு தமியரை
இகலி மாமதி
பண்டுள முனிவரர்

பரமன் மேல்விடு
வெண்டலை யாமென
விண்ணில்
தோன்றினான். 371

435 இத்துணை
வேலையில் இலக்கத்
தெண்மராம்
மெய்த்துணை
யார்களும் வெய்ய
பூதரும்
அத்துணைப்
படைகளும் அயலிற்
சென்றிட
மொய்த்துணை
விறலுடை
மொய்ம்பன்
மீண்டனன். 372

436 அந்தமில் கயிலையை
அருளிற் போற்றிடு
நந்திதன் கணத்தரின்
நாத னாகியோன்
விந்தைகொள்
செருநிலம் ஒருவி
மீண்டுபோய்க்
கந்தவேள் பாசறைக்
கண்ணுள்
நண்ணினான். 373

437 நண்ணிய திறலினான்
நான்மு கன்முதற்
புண்ணிய மேலவர்
போற்ற ஆண்டுறு
கண்ணுதல் அருள்புரி
கந்தன் முன்புபோய்த்
துண்ணென

வணங்கினன்
துணைவர்
தம்மொடும். 374
438 வணங்கினன்
எழுந்துபின் வள்ளல்
தோ¢ந்திட
இணங்கலன் தன்மகன்
எதிர்ந்து போர்செயா
அணங்குடன்
இரிந்ததும்
அனைத்துஞ்
செப்பலுங்
கணங்களின்
முதல்வன்மேற்
கருணை ஆற்றினான்.
375
439 நல்லருள் புரிந்தபின்

நம்பி இப்பகல்
தொல்லமர்
உழத்தலின் துன்பங்
கூர்ந்துளாய்
எல்லிது பொழுதுநின்
இருக்கை தன்னிடைச்
செல்லுதி
துணைவரோ டென்று
செப்பினான். 376

செப்பலும்
விடைகொடு செம்மல்
பின்னவர்
மெய்ப்படு பாரிடம்
விரவச் சென்றொராய்
ஒப்பருந் தனதுபேர்
உறையுள் வைகினான்
துப்புறு தானைகள்

தொன்மை போலுற. 377
441 சேயவன் விடுத்திடு
சேனை பாசறை
போயதும் இருந்ததும்
புகலுற் றாம்இனி
மாயிரு வளங்கெழு
மகேந்தி ரப்பதி
ஆயிடை நிகழ்ந்தவா
றறியக் கூறுவாம்.
378

442 ஆடுறு சமரிடை
அழிந்து முன்னரே
ஓடிய அவுணர்கோன்
உள்ளந் தன்னிடைப்
பாடுறு துயரமும்
பழியும் மானமும்
நீடினன் பெருமித

நிலைமை நீங்கினான். 379
443 கோனுறு மந்திரங்
குறுகல் செய்திலன்
தானுறு திருநகர்
தன்னில் ஏகியே
ஊனம
துடையர்போல்
உயங்கி வைகினான்
பானுவின்
பகைஞனென்
றுரைக்கும்
பண்பினான். 380
444 மந்திரக் கிளையொடு
மருவ வேண்டலன்
தந்திரத் தமரொடுஞ்
சார்தல் வேண்டலன்
சிந்துரத் தொல்பகைச்

சென்னி போற்றிய
இந்திரப் பெருந்தவி
சிருக்கை
வேண்டலன். 381
445 ஆடுறு மங்கையர்
ஆடல் வெஃகலன்
பாடுறு மங்கையர்
இசையில் பற்றலன்
கூடுறு மங்கையர்
குழாமும் நோக்கலன்
ஊடுறு மங்கையர்
புணர்ப்பும்
உன்னலான். 382
446 நிசாவது சென்றபின்
நெடுஞ்செவ்
வேலுடை
விசாகனை

அவன்படை வீரர்
தங்களை
அசாவுறு
செருவில்வென் றாடல்
கொள்வதற்
குசாவினன்
உளத்துடன் ஊக்கம்
வேறிலான். 383

447 வேறு
ஆதவன் தன்பகை
அவ்வழி அமர்தலும்
மேதகுந் தொல்சமர்
விளைவெலாம்
நோக்கியே
மூதகுந் திருநகர்
முழுமணிக்
கோயிலில்

தூதர்கை
தொழுதுபோய்ச்
சூரனுக்
குரைசெய்வா£¢. 384

448 கேட்டியால் உன்மகன்
கேடிலா வாகைசேர்
தோட்டுணை
யானொடுந்
தொல்சமர் ஆற்றியே
ஈட்டுபல் பூதரை
ஈறுசெய் திவ்விடை
மீட்டும்வந்
தெய்தினான்
வினையமுண்
டாங்கொலோ. 385

449 அன்னபண்

புணர்கிலேம்
அதனைமேல்
அறிதியான்
மின்னுதண் சுடருடை
வேலவன் தூதனும்
பன்னரும்
படையொடும்
பாசறைக் கேகினான்
இன்னதால்
விளைவெனா
இவையெலாம் 386
பகர்தலும்.
மாற்றலார் தமையட
வலியில னாகியே
ஊற்றமா மைந்தன்வந்
துற்றசொற்
கேட்குமுன

சீற்றமாய் எரிவிழி
சிதறவே வெய்துயிர்த்
தாற்றவும் முறுவலித்
தரசன்ஒன் 387
றுரைசெய்வான்.

451 மைந்தரும்
துணைவரும்
மருவுபல் சுற்றமும்
தந்திரத் தலைவருஞ்
சமரினுக் கேகலர்
நந்தலில் படையொடு
நாளைநான்
சென்றுபின்
கந்தனைத்
திறல்கொடே
கடிதில்மீண்
டிடுவனால். 388

452 போதிர்இப்
பொழுதெனப்
புகறலும் பணிகுறாத்
தூதுவர் போயினார்
சூரனாம்
அவுணர்கோன்
ஏதிலார் தம்மைவென்
றிசைபுனைந்
திடுதல்மேற்
காதலாய் வைகினான்
யாவதுங் கருதலான். 389

453 அடுபெரும்
போரினை ஆற்றியே
ஆற்றலால்
முடிவிலா
விறல்கொள முன்னுவீ
ரர்க்கெலாம்

நெடியவளாய்த்
திறலிலா நெஞ்சினா
ருக்கெலாம்
கடியளாய்
வைகினான்
கங்குலாம் நங்கையே. 390

454 பிரிகுவார் தங்களைப்
பிரிகலா தேனையோர்
அருகுதான் நிற்கலா
தச்சம்நாண் இன்றியே
விரகநோய்
தெறுதலால் மிக்கதோர்
தூர்த்தராய்த்
திரிகுவா ராமெனச்
செல்லும்இவ்
வெல்லியே. 391

455 பாடுசால் தென்றிசைப்

பா£¢புரந் திடும்இரா
ஈடுசால் வெம்பகல்
எல்லொடும் வருவது
நேடியே மதியெனும்
நீள்குடை முன்செல
ஓடல்போற்
போயதால்
உடுவெனும்
படையொடும். 392

456 மையிருட்
கலையினை
மகிழ்நனாம்
மதிநிலாக்
கையினால் நீக்கியே
கலவிசெய் தகலுழி
வெய்யவன்
வருமெனா

வெள¢கியத்
துகிலுடீஇ
ஒய்யெனப்
போயினாள்
கங்குலென் 393
றுற்றுளாள்.

ஆகத் திருவிருத்தம் - 456

--------

---

This file was last revised on 15 Nov. 2007
Feel free to send corrections and comments to the webmaster.